

ஆகஸ்ட்
1994
August

# தமிழர் தகவல்
## TAMILS' INFORMATION

இதழ்
43
ISSUE













இது ஒரு மாதாந்த தகவல் மஞ்சரி

A Monthly Information Digest

தமிழர் தகவல்
TAMILS' INFORMATION

**Established**
February 1991

P.O. Box -3
Station 'F'
Toronto, On. M4Y 2L4

Phone: (416) 920-9250
Fax: (416) 757-7399

**Produced by**
Eelam Thamil Information Centre (ETHIC) of Toronto
&
Catholic Immigration Bureau, Scarborough Region

**Published by**
Thamil Information Research Unit (THIRU)
&
Ahilan Associates

**Editor in chief**
Thiru S. Thiruchelvam

**Associate Editor**
Ranji Thiru

**Assistant Editors**
Sasi Pathmanathan
V. Vivekananthan

**General Manager**
S.T. Singam

**Production Asst.**
N. Kumaradasan

**Circulation Assts.**
P. Balakumar
P. Sivasubramaniam
R.Rajasegaran

**Typesetting Layout & Design**
Ahilan Associates

**Technical Support**
Haran Graph &
T.V. L. Ananth

**Printers**
Ahilan Associates
(416) 920-9250

**PUBLISHED MONTHLY**
4000 Copies

## ஆசிரியரிடமிருந்து . . . . . . . . . . . . FROM THE EDITOR

கனடிய குடிவரவுச் சட்டத்தில் அண்மைக் காலத்தில் பல பாரிய மாற்றங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன. இதற்கான அறிவித்தல்கள் தொடர்ந்து வெளிவந்தவாறுள்ளது.

கனடிய நாடு ஒன்றிணைக்கப்பட்ட கூட்டாட்சி அமைப்பைக் கொண்டது. 127 ஆண்டுகளுக்கு முன்னர் இந்தக் கூட்டாட்சி ஏற்படுத்தப்பட்டது.

முற்று முழுதாகக் குடிவரவாளர்களால் கட்டியெழுப்பப்பட்ட இந்நாட்டுக்குக் குடிவரவாளர்கள் சட்டபூர்வமாக அனுமதிக்கப்பட்டு 125 ஆண்டுகள் பூர்த்தியடைந்துள்ளன. இதனை முன்னிட்டு இவ்வாண்டு பல கொண்டாட்டங்கள் நடைபெறவுள்ளன.

இந்தச் சந்தர்ப்பத்தில் குடிவரவாளர்-அகதிகள் விடயத்தில் கரிசனைமிக்கவாறு சட்டத்தில் கொண்டு வரப்படும் மாற்றங்கள் அவதானிக்கப்பட வேண்டியவை.

லிபரல் கட்சி அரசாங்கம் கடந்த ஆண்டுப் பொதுத் தேர்தலில் அமோக வெற்றியீட்டியதற்குக் குடிவரவாளர்-அகதிகள் வழங்கிய மகத்தான ஆதரவே முக்கிய காரணம். இதனை மனதில் வைத்தே, வெளிநாட்டில் பிறந்து கனடாவில் குடிபுகுந்தவரான ஸேர்ஜியோ மார்கிக்கு குடிவரவுத்துறை அமைச்சர் பதவி வழங்கப்பட்டதாகக் கூறப்பட்டது.

வாக்காளப் பொதுமக்களின் நம்பிக்கையை இதன் மூலம் பெறலாமென அரசு கருதியிருக்கலாம். அந்த நம்பிக்கை நிறைவேறியிருப்பதாக இப்போதைக்குக் கருத இடமுண்டு.

அகதிக் கோரிக்கை விசாரணைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன.

அகதிநிலை நிரூபிக்கப்படுவதற்கு முன்னரே வேலை அனுமதிப் பத்திரம் வழங்கப்படுகின்றது.

குடும்பங்கள் மீள இணைதல் திட்டம் இயலுமான வரை வேகப்படுத்தப்பட்டுள்ளது.

1993 பெப்ரவரி மாதத்துக்குப் பின்னர் அகதிநிலை நிராகரிக்கப்பட்டவர்கள் விடயத்தில் 'மீளாய்வுத் திட்டம்' அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

ஸ்பொன்ஸர் விண்ணப்பங்களைத் தாமதமின்றிக் கவனிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

பயங்கரக் குற்றவாளிகளையும், பாதுகாப்புக்குக் குந்தகமானவர்களையும் நாடு கடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த வரிசையில் இறுதியாக அமைச்சரினால் எடுக்கப்பட்ட நடவடிக்கையானது, அகதிநிலை மறுக்கப்பட்ட பின்னர் மூன்றாண்டுகளாகத் தொடர்ச்சியாக கனடாவில் குடியிருப்பவர்கள் நிரந்தரக் குடியுரிமைக்கு விண்ணப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குவதாகும்.

அகதிநிலை மறுக்கப்பட்டவர்கள் விடயத்தில் மத்திய அரசாங்கம் 'பொது மன்னிப்புத் திட்டம்' ஒன்றினை வழங்கும் என்று பொதுவாகவே பலராலும் எதிர்பார்க்கப்பட்டு வந்தது.

ஆனாலும் 'பொது மன்னிப்பு' என்ற பதத்தை எந்தச் சந்தர்ப்பத்திலும் பயன்படுத்த அமைச்சர் விரும்பவில்லை.

எனவே, கனடிய அரசாங்கத்துக்குப் பாரமாக இருக்காத, தங்கள் சொந்தக் காலில் தாங்களாகவே தங்கியிருக்கக் கூடியவர்கள் கனடாவில் நிரந்தர வசிப்புரிமைக்கு விண்ணப்பிக்கும் சந்தர்ப்பத்தை அமைச்சர் வழங்கியுள்ளார்.

இதன்பிரகாரம், அகதிநிலைக் கோரிக்கை நிராகரிக்கப்பட்ட பின்னர் மூன்றாண்டு காலம் இங்கு வசித்து வருபவர்கள், ஆகக் குறைந்தது ஆறு மாத காலமாவது சட்டப்படி கனடாவில் வேலை செய்திருந்தால் அவர்கள் நிரந்தர வசிப்புரிமைக்கு விண்ணப்பிக்கலாம்.

இவ்வருடத்தின் கடைசி மூன்று மாதங்களான அக்டோபருக்கும் டிசம்பருக்குமிடையில் இதற்கான விண்ணப்பங்கள் அனுப்பப்பட வேண்டும்.

இவைபற்றிய விபரமான தமிழ், ஆங்கிலக் கட்டுரைகள் இந்த இதழில் இடம்பெற்றுள்ளன. மேலதிக விபரங்கள் அடுத்தடுத்த இதழ்களில் இடம்பெறும்.

தற்போது அகதிநிலை மறுக்கப்பட்டு வாழும் சுமார் 25,000 பேரில் ஏறத்தாழ 8000 பேர் இப்புதிய திட்டத்தினால் 'லான்டட்' பெறுவரென்று அரசு மதிப்பிட்டுள்ளது. இவர்களில் 800 பேர் வரை இலங்கையரகள் இருக்கக்கூடும்.

இந்தத் திட்டம் தொடர்ச்சியான ஒன்றாக நடைமுறைப்படுத்தப்படவிருப்பதால், அரசாங்க நிதியுதவி எதனையும் நம்பியிராது, தங்கள் ஜீவனோபாயத்துக்குத் தாமே உழைத்து வாழுபவர்கள் கனடிய நிரந்தரக் குடியிருப்பாளராவதற்குத் எந்தத் தடையும் இருக்கப்போவதில்லை.

இதனை நம்மவர்கள் மனதிலிருத்திக் கொள்ள வேண்டும்.

**எஸ். திருச்செல்வம்**

தமிழர் தகவல்
TAMILS' INFORMATION

**ஸ்தாபிதம்**
பெப்ரவரி 1991

**முகவரி**
P.O. Box - 3
Station 'F'
Toronto, On. M4Y 2L4

**போன் :** (416) 920-9250
**பக்ஸ் :**(416) 757-7399

**தயாரிப்பு**
ஈழத்தமிழர் தகவல் நிலையம் - ரொறன்ரோ
&
கத்தோலிக்க குடிவரவு நிலையம் ஸ்காபரோ

**வெளியீடு**
தமிழர் தகவல் ஆய்வுப் பிரிவு
&
அகிலன் அசோஷியேற்ஸ்

**பிரதம ஆசிரியர்**
எஸ் . (திரு) திருச்செல்வம்

**இணை ஆசிரியர்**
றஞ்சி திரு

**உதவி ஆசிரியர்கள்**
சசி பத்மநாதன்
வே. விவேகானந்தன்

**பொது முகாமையாளர்**
எஸ். ரி. சிங்கம்

**தயாரிப்பு உதவியாளர்**
என். குமாரதாஸன்

**விநியோக உதவியாளர்கள்**
ப. பாலகுமார்
ப. சிவசுப்பிரமணியம்
இ. இராஜசேகரன்

**ஒளி அச்சு வடிவமைப்பு**
அகிலன் அசோஷியேற்ஸ்

**தொழில்நுட்ப உதவி**
ஹரன் கிறாப் &
ரி. வி. எல். ஆனந்த்

**அச்சுப்பதிப்பு**
அகிலன் அசோஷியேற்ஸ்
(416) 920-9250

**மாதாந்த வெளியீடு**
4000 பிரதிகள்

## அகதிநிலைக் கோரிக்கை நிராகரிக்கப்பட்ட பின்னர் மூன்று ஆண்டுகள் கனடாவில் வசித்திருப்பின் ஒரு சந்தர்ப்பம்

# குறைந்தது 6 மாதமாவது சட்டப்படி வேலை செய்திருந்தால் நிரந்தர வசிப்பிட உரிமைக்கு ஒருவர் விண்ணப்பிக்கலாம்

கனடாவில் 1989ம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதிக்குப் பின்னர் அகதி நிலைக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டு, அதன்பின்னர் தொடர்ச்சியாக மூன்று ஆண்டு களுக்கு மேலாக இங்கு வசித்து வருபவர் களாக மதிப்பிடப்பட்டிருக்கும் சுமார் 25,000 பேரில் 8,000 பேருக்கு நிரந்தர வசிப்பிட உரிமை பெறும் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. கனடிய மத்திய அரசாங்கத்தின் குடிவரவு அமைச்சர் ஷேர்ஜியோ மார்கி கடந்த மாதம் ஏழாம் திகதி விடுத்த அறிவித்தலொன்றின் பிரகாரமே இந்தச் சலுகை 8000 பேருக்குக் கிடைக்கின்றது.

இதன்பிரகாரம், இங்கு அகதிநிலை மறுக்கப்பட்ட பின்னர் தொடர்ச்சியாக மூன்றாண்டுகள் வசித்து வரும் ஒருவர், அதற்கு அடுத்து வரும் தொண்ணூறு நாட்களுக்குள் தமது நிரந்தர வசிப்பிட உரிமைக்கான விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்க வேண்டும். இவ்வருடம் அக்டோபர் மாதம் முதலாம் திகதியிலிருந்து இந்த விண்ணப்பங்கள் குடிவரவுத் திணைக்களத்தினால் ஏற்றுக் கொள்ளப்படும்.

இதற்கெனப் புதிய விண்ணப்பப் பத்திரங்கள் எதுவும் விநியோகிக்கப்படுமா என்று இதுவரை அறிவிக்கப்படவில்லை. விபரங்கள் அக்டோபர் முதலாம் திகதியளவில் வெளியாகும் என்று மட்டும் குடிவரவு அமைச்சு அறிவித்துள்ளது.

எனினும், ஒவ்வொருவரும் தமது கைப்பட விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க வேண்டும் என்றும், அவை அல்பேர்ட்டாவின் வெகர்வில் என்ற இடத்தில் அமைந்துள்ள குடிவரவு மத்திய செயற்பாட்டு நிலையத்தில் பரிசீலனைக்கு எடுக்கப்பட்டு செயற்படுத்தப்படும் என்றும், சரியான தகவல்கள் வழங்கப்படாத விண்ணப்பங்கள் உள்நாட்டு/பிரதேச குடிவரவு அலுவலகங்களுக்கு அனுப்பப்பட்டு அவைகள் ஊடாகத் திருத்தங்கள் செய்யச் சந்தர்ப்பமளிக்கப்படும் என்றும் அமைச்சர் விளக்கியுள்ளார்.

அகதிநிலை நிராகரிக்கப்பட்டவர்கள், அவர்களில் தங்கி வாழுபவர்கள் (கணவர்/மனைவி, பிள்ளைகள்) ஆகியோர் இந்தச் சலுகைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறாக நிரந்தர வசிப்பிட உரிமைக்கு விண்ணப்பிப்பவர்கள் முக்கியமான சில நிபந்தனைகளைப் பூர்த்தி செய்பவர்களாக இருக்க வேண்டும்:

முதலாவது: இவர்கள் தமக்குரிய குறிப்பிட்ட மூன்றாண்டு காலத்துக்குள் ஆறு மாத காலமாவது சட்டப்படி தொழில் புரிந்திருக்க வேண்டும். தொடர்ந்து அரச நிதியுதவி /வெல்பெயர் போன்றவைகளில் இருந்தவர் களாக இருக்கக் கூடாது. அதாவது தம்மை யும், தமது குடும்பத்தினரையும் உழைத்துப் பராமரிக்கக் கூடியவர்களாக இருக்க வேண்டும். இதனைச் சட்ட பூர்வமாக நிருபிக்க வேண்டும்.

இரண்டாவது: கனடாவுக்கு வெளியில் எந்தக் குற்றச் செயலிலும் ஈடுபடாதவராகவும், கனடாவின் பாதுகாப்புக்குக் குந்தகம் விளைவிக்காதவராகவும் இருக்க வேண்டும் பாதுகாப்பு அறிக்கைகள் மூலம் இது கவனிக்கப்படும்.

மூன்றாவது: கடந்த காலங்களில் கனடிய குடிவரவுச் சட்டத்தின் கீழ் நாட்டை விட்டு வெளியேற்றும் உத்தரவு பிறப்பிக்கப்பட்ட பின்னர் அதனை உதாசீனம் செய்து, அதற்கு 'டிமிக்கி' விட்டுத் திரிந்த ஒருவரா்க இருக்கக் கூடாது.

## 'எஸ்தி'

நான்காவது: தங்களைத் தாங்களே பராமரிக்க முடியாதவர்களும் அல்லது சுகாதார/சமூக நல உதவியில் தங்கியிருக்க வேண்டிய நிலையிலுள்ளவர்களும் தகுதியற்றவர்கள்.

அகதிநிலைக் கோரிக்கை மறுக்கப்பட்ட பின்னர் கனடாவில் மூன்றாண்டு காலம் தங்கியிருந்ததாகக் கருதப்படும் ஒருவர், மூன்றாண்டு காலம் வசித்ததாகக் கணிக்கப்படும் காலம் 1994ம் ஆண்டு ஜுலை மாதம் 7ம் திகதிக்கு முற்பட்டதாக இருக்க வேண்டும். இந்தத் திகதியிலன்றே அமைச்சரின் சலுகைத் திட்டம் அறிவிக்கப்பட்டது கவனிக்கப்பட வேண்டியது.

இந்தச் சலுகைத் திட்டத்தின் கீழ் கனடாவில் நிரந்தர வசிப்பிட உரிமைக்கு விண்ணப்பிக் கத் தகுதியுடையவர்களென்று குடிவரவு அமைச்சினால் எண்ணப்படும் எண்ணாயிரம் பேரில் அரைவாசித் தொகையான நான்கா யிரம் பேர் மக்கள் சீனக் குடியரசைச் சேர்ந் தவர்கள். இனத்தால் இவர்கள் சீனர்கள்.

1989ம் ஆண்டில் அங்கு இடம்பெற்ற படுகொலைச் சம்பவங்களையடுத்து இவர்கள் கனடாவில் புகலிடம் கோர நேர்ந்தது. எனினும் இவர்கள் விசாரணையின் பின்னர் நிராகரிக்கப்பட்டனர்.

மிகுதி நான்காயிரம் பேரில் இலங்கை(சுமார் 800 எனக் கணிப்பு), சோமாலியா, கியுபா, எத்தியோப்பியா, எரித்திரியா, கௌதமாலா, ஹெய்ற்றி, ஈரான், ஈராக் ஆகிய நாட்டவர்கள் அடங்குவர்.

கனடாவிலிருந்து வெளியே செல்பவர்கள் மீது எந்தவிதமான கட்டுப்பாடும் இல்லாத-தால் இந்தச் சலுகைத் திட்டத்தின் கீழ் விண்ணப்பிக்கத் தகுதி பெற்றவர்களில் எத்தனை பேர் இன்னமும் இங்கு இருக்கின்றனர்/ எத்தனை பேர் வெளியே சென்றுள்ளனர் என்றோ எத்தனை பேரின் விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறும் என்றோ அரசாங்கத்தினால் திட்டவட்டமாகக் கூறமுடியாது என்றும் அமைச்சர் மார்கி குறிப்பிட்டுள்ளார்.

மொத்தத்தில், கடந்த மாதம் ஏழாம் திகதிக்கு முன்னர் அகதிநிலைக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டு, கனடாவில் மூன்றாண்டு காலம் வசித்த ஒருவர் (அவரது குடும்பத்தினர்), ஆகக்குறைந்தது குறிப்பிட்ட மூன்றாண்டினில் ஆறு மாதமாவது சட்டபூர்வமாகத் தொழில் புரிந்திருந்தால், நாட்டின் பாதுகாப்புக்குக் குந்தகமற்றவராக இருப்பின், அவர் நிரந்தர வசிப்பிட உரிமைக்கு விண்ணப்பஞ் செய்ய முடியும். அவர் (அவரது குடும்பம்) இவ்வருடம் அக்டோபர் மாதம் முதலாம் திகதியிலிருந்து அடுத்து வரும் தொண்ணூறு நாட்களுக்குள் அதற்கான விண்ணப்பத்தை அனுப்ப வேண்டும். அதாவது இவ்வருடம் அக்டோபர் மாதத்துக்கும் டிசம்பர் மாதத்துக்குமிடையில் விண்ணப்பம் செய்ய வேண்டும்.

இந்தச் சலுகைத் திட்டமானது, குறிப்பிட்ட ஒரு சாராருக்கோ அல்லது குறிப்பிட்ட ஒரு காலப் பகுதியிலே நிராகரிக்கப்பட்டவர்களுக்கு மட்டுமானதாக இருக்கக் கூடாது என்பது அரசாங்கத்தின் திடமான கொள்கை. இதனை ஒரு தொடர்ச்சியான நடைமுறைத் திட்டமாகவே அரசு அமலுக்குக் கொண்டுவருகின்றது. இதன்படி இந்த மூன்றாண்டு காலச் சலுகைத் திட்டம் தொடர்ச்சியாக அமலிலிருக்கும் என்றும், அதற்கேற்ற வகையில் இது சட்டமாக்கப்படுகின்றது என்றும் அமைச்சர் அறிவித்துள்ளார்.

(27ம் பக்கம் பார்க்க)

# றிச்மன்ட்ஹில் ஆலய தலைவர் பதவியிலிருந்து திரு. நா. சிவலிங்கம் ராஜினாமா

வடஅமெரிக்காவின் மிகப்பெரிய இந்து ஆலயமாகத் திகழும் றிச்மன்ட்ஹில் இந்து ஆலயத்தை நிர்வகித்துவரும் 'கனடா இந்து ஆலய அறங்காவலர் சபை' தலைவராகக் கடந்த பல வருடங்களாகப் பணிபுரிந்து வந்த திரு. நா. சிவலிங்கம் அவர்கள், கடந்த மாதம் (ஜுலை) 31ம் திகதி தமது பதவியிலிருந்து ராஜினாமாச் செய்யும் கடிதத்தைச் சமர்ப்பித்தார்.

கனடாவாழ் தமிழர் சமூகத்தினால் மிகவும் போற்றிப் பாராட்டப்பட்டு வந்த இவர், மற்றைய இன மக்களாலும் நன்கு மதிக்கப்பட்டுவந்த பிரமுகர். பொதுவாகச் சகலராலும் 'தலைவர்' என்றே இவர் அழைக்கப்படுவார். இவரது திடீர் பதவி விலகல் அனைவரையும் பெரும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

"கடந்த சில வருடங்களாக ஆலய நிர்வாகத்தில் சில சிக்கல்கள் இருந்து வந்ததைப் பலரும் அறிவர். இவைகளை நேர்வழிப்படுத்தி, வழிபடுவோர் தொண்டர்கள் ஆகிய அனைவரையும் அரவணைத்து நடத்தவே திரு. சிவலிங்கம் அவர்கள் முனைந்து வந்தார். முக்கியமாக விரத நாட்கள், மற்றும் புண்ணிய காலங்களைப் பொதுவாக அனைவரும் ஏற்றுக் கொள்ளும் தினங்களில் நடத்த அவர் விரும்பினார். நிர்வாகத்தில் பலரும் அதற்கு உடன்பாடாக இருக்கவில்லை. இதனாலேயே அவர் தமது தலைவர் பதவியைத் துறக்க நேர்ந்தது" என்று ஆலயத் தொண்டர்கள் சிலர் தெரிவித்தனர்.

ஆடி அமாவாசை இங்குள்ள சகல ஆலயங்களிலும் இந்த மாதம் ஆறாம் திகதி அனுஷ்டிக்கப்படுகின்றது. இங்குள்ள பஞ்சாங்கங்களும் அதனையே தெரிவிக்கின்றன. கனடிய இந்து சமய நிறுவனங்களும் ஆறாம் திகதி சனிக்கிழமையே ஆடி அமாவாசை தினம் என்று ஏகோபித்த முடிவெடுத்துள்ளன. திரு. சிவலிங்கம் அவர்களும் ஆடி அமைாவாசை விரதம் றிச்மன்டஹில் ஆலயத்தில் ஆறாம் திகதி நடத்தப்பட வேண்டும் என்ற கருத்தினைக் கொண்டிருந்தார். ஆனால் நிர்வாகிகள் மட்டத்தில் அதற்கு ஆதரவு இருக்கவில்லை. இதனால் அவர் மனமுடைந்திருந்தார். இவ்வாறான நிலையில் பதவி விலகுவதைத் தவிர அவருக்கு வேறு வழியிருக்கவில்லை என்று விஷயமறிந்த சில தொண்டர்கள் தமிழர் தகவலுக்குத் தெரிவித்தனர்.

இச் செய்தி அச்சுக்குப் போகும் வரை திரு. சிவலிங்கம் அவர்களது ராஜினாமா ஏற்றுக் கொள்ளப்பட்டதா என்பது பற்றி விபரம் தெரிய வரவில்லை. ஆனால் ராஜினாமா விடயம் உண்மை என்று சபையின் செயலாளர் திரு. ஆர். வெங்கட்ராமன் தெரிவித்தார்.

தமது ராஜினாமாவுக்கான காரணங்களை விளக்கி திரு. சிவலிங்கம் அவர்கள் அறிக்கையொன்றினை வெளியிடலாமென்று எதிர்பார்க்கப்படுகின்றது.

ஆலயத்தின் பணிகள் பொதுமக்களுடன் சேர்ந்ததாக இருக்க வேண்டும் என்ற கருத்தையும், சைவ சமயம் மக்கள் மயப்படுத்தப்பட வேண்டும் என்ற நம்பிக்கையையும் கொண்டிருந்த திரு. சிவலிங்கம் அவர்கள், கனடாவுக்குப் புதிதாக வரும் தமிழர்களின் சமயத் தேவைகளை மட்டுமன்றி சமூகத் தேவைகளையும் நிறைவேற்றும் நிறுவனமாக றிச்மன்ட்ஹில் ஆலயம் மாற்றம் பெறவேண்டும் என்றும் கடந்த சில மாதங்களாக வலியுறுத்தி வந்ததும் இங்கு குறிப்பிடப்பட வேண்டியது.

# ஸ்பொன்ஸர், வெல்ஃபெயரில் இடம்பெற்ற மோசடிகள் அம்பலத்துக்கு வருகின்றன

வருவாய் எதுவும் இல்லாதவர்களுக்கு வழங்கப்படும் வெல்ஃபெயர் எனப்படும் சமூக நல உதவிப் பணத்தில் பல வருடங்களாக இடம்பெற்று வந்ததாகக் கூறப்படும் பல ஊழல்களையும் மோசடிகளையும் துப்புத் துலக்குவதில் சமூக சேவைத் திணைக்கள அதிகாரிகள் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

இதன் பலனாக கடந்த ஆறு மாதங்களில் சுமார் அறுநூற்றைம்பது வரையானவர்களின் கோவைகள் பரிசீலனை செய்யப்பட்டு அவர்களின் மோசடிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக திணைக்களப் பேச்சாளர் ஒருவர் கூறியுள்ளார்.

இவ்வாறு அகப்பட்டவர்களில் புதிய குடிவரவாளர்களும், அகதிகளும் அநேகமாகவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொழில் புரியும் பலர் தமக்கான சம்பளங்களைக் காசோலையாகப் பெறாமல், காசாகப் பெற்றுக் கொண்டு, மறுபுறத்தில் சமூக நல உதவிப் பணமும் பெற்றுள்ளது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. முக்கியமாக, சிலர் பதிவு செய்யப்படாத அல்லது வரி செலுத்தாத வேலைத் தலங்களில் பணி புரிந்து கொண்டு, சமூக நல உதவிப் பணமும் பெற்றுள்ளது தெரியவந்துள்ளது.

சொந்தமாக வியாபாரம் அல்லது வர்த்தகம் புரியும் சிலர் அதனை மறைத்து தாமும் சில சமயங்களில்தமது குடும்பத்தினருமாக சமூக நல உதவிப் பணம் பெற்றுள்ளதாகவும்,, அவர்களது நண்பர்கள் உறவினர்கள் ஊடாக தேவைப்படும் தகவல்கள. பெறப்பட்டுள்ளதாகவும் திணைக்கள அதிகாரி ஒருவர் அண்மையில் நடைபெற்ற கலந்துரையாடல் ஒன்றில் தெரிவித்தார்.

ஸ்பொன்ஸர் செய்யப்பட்டு வெளிநாடுகளிலிருந்து வந்த சிலர், தம்மை ஸ்பொன்ஸர் செய்த தமது உறவினர் (பிள்ளைகள், சகோதரர், மருமக்கள் போன்றோர்) கவனிப்பதில்லை என்றும் தாம் புதிய இருப்பிடத்துக்கு இடம் மாறியிருப்பதாகவும், தஸ்தாவேஜுகளைச் சமர்ப்பித்து சமூக நல உதவிப் பணம் பெற்றுவருகின்றனர்.

இவர்களில் அநேகமானவர்களும் புதிய முகவரிகளைக் கொடுத்தே சமூக நல உதவிப் பணம் பெறுகின்றபோதிலும், தம்மை ஸ்பொன்ஸர் செய்தவர்களுடனேயே தொடர்ந்தும் வசித்து வருகிறார்கள் என்பது இரகசிய விசாரணை மூலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் வெல்ஃபெயர் கொடுப்பனவு அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

குடிவரவுத் திணைக்களமும் சமூக சேவைப் பகுதியினரும் அண்மைக் காலங்களில் இணைந்து பணியாற்றத் தொடங்கியிருப்பதன் மூலம், ஸ்பொன்ஸரில் இடம்பெற்று வந்ததாகக் கூறப்படும், நீண்டகால மோசடி ஒன்று அம்பலத்துக்கு வந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெல்ஃபெயர் பணத்தை மாதா மாதம் பெற்று வந்த சிலர், தாம் மாதாந்தச் சம்பளத்துக்கு வேலை செய்வதாகப் பொய்யான தகவலை வழங்கி, அதற்குச் சான்றாக தனியார் நிறுவனங்களிலிருந்து பெறப்பட்ட சம்பளத்தை நிரூபிக்கும் கடிதங்களையும் இணைத்து குடும்ப உறவினர்களை ஸ்பொன்ஸர் செய்துள்ளனராம்.


ஆனால் குடும்ப உறுப்பினர்கள் கனடா வந்ததும், தாங்கள் வேலையிழந்து விட்டதாகப் பொய்யான விபரங்களை வழங்கி, அவர்களையும் வெல்ஃபெயரில் சேர்த்துள்ளனர் என்றும் அதிகாரிகள் கண்டு பிடித்துள்ளனர்.

இவ்வாறான பலரது கோவைகள் விசேஷ விசாரணைப் பிரிவு அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்டுள்ளதாகவும், அவசியமேற்படும்போது ஆர். சி. எம். பி எனப்படும் விசேஷ பொலிஸாரிடம் இந்தத் தஸ்தாவேஜுகள் கையளிக்கப்படும் (19ம் பக்கம் பார்க்க)

# சைவ மகாஉலகில் கனடாவின் பெயரினைப் பொறித்த நான்காவது சைவ சித்தாந்த ஆராய்ச்சி மகாநாடு







அனைத்துலக நான்காவது சைவ சித்தாந்த ஆராய்ச்சி மகாநாடு கடந்த (ஜுலை) மாதம் முதல் வாரத்தில் கனடாவில் சிறப்பாக நிகழ்ந்தேறியது. ஜுலை முதலாம் நாள் றிச்மன்ட்ஹில் இந்து ஆலயத்தில் யாகபூஜை மற்றும் விசேஷ ஆராதனைகளுடன் மாநாடு கோலாகலமாக ஆரம்பமானது. ஹவாய் தீவு ஆதீன ஸ்ரீசிவாய சுப்பிரமுனிய சுவாமிகள் மகாநாட்டை ஆரம்பித்து ஆசியுரை வழங்கினார்.

கனடா றிச்மன்ட்ஹில் இந்து ஆலய அறங்காவலர் சபைத் தலைவரும், சைவ சித்தாந்த மகாநாட்டுத் தலைவருமான திரு. நா. சிவலிங்கம் அவர்களின் தலைமையில், அவரது வரவேற்புரையுடன் மகாநாடு ஆரம்பமானது.


தமிழ்நாட்டிலிருந்தும் மற்றைய பல வெளிநாடுகளிலிருந்தும் சமயப் பிரமுகர்கள் பலர் வந்திருந்தனர். தற்போது அவுஸ்திரேலியாவில் சைவத் தொண்டாற்றிவரும் சுன்னாகம் கதிரைமலை சிவன் ஆலயப் பிரதம குருக்களாகவிருந்த சிவஸ்ரீ நா. சோமாஸ்கந்தக் குருக்கள் அவர்களும் முக்கியஸ்தர்களில் ஒருவராக வந்திருந்தார்.


இலங்கையிலிருந்து 'ஆத்மஜோதி' ஆசிரியர் திரு. நா. முத்தையா, திருக்கேதீஸ்வரம் ஆலய சபைச் செயலாளர் சட்டத்தரணி எஸ். நமசிவாயம், திருக்கேதீஸ்வர திருவாசக மடம் சுமாமிகள் சரவணமுத்து அடிகளார், புலவர் ஈழத்துச் சிவானந்தன் ஆகியோர் மகாநாட்டுப் பேராளர்களாக வந்திருந்தனர்.

இரண்டாம் மூன்றாம் திகதிகளில் மகாநாடு யோர்க் பல்கலைக் கழக மண்டபத்தில் நடைபெற்றது. வெளிநாடுகளிலிருந்து வந்திருந்த பிரதிநிதிகளின் உரைகளுடன் உள்ளூர் சமய அறிஞர்கள், பிரமுகர்களின் பேச்சுகளும் இடம்பெற்றன. இலங்கையில் வடமாநிலக் கல்விப் பணிப்பாளராக இருந்த திரு. தி. மாணிக்கவாசகர், சுன்னாகம் இராமநாதன் கல்லூரி அதிபராகவிருந்த திருமதி. புவனேஸ்வரி சச்சிதானந்தம், முன்னாள் அதிபர் கவிஞர் வி. கந்தவனம். முன்னாள் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் திருமதி. வள்ளிநாயகி இராமலிங்கம் ஆகியோர் இவ்வாறு உரையாற்றியவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள்.

யோர்க் பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற இரண்டு நாள் ஆராய்ச்சி மகாநாடு முற்று முழுதாக ஆய்வரங்காக இடம்பெற்றதால் இதில் பங்குகொண்ட பொதுமக்கள் குறைவாகக் காணப்பட்டனர். ஆனாலும் சைவ சித்தாந்த ஆராய்ச்சியுடன் தொடர்பு கொண்டவர்களாகவும், இத்துறையில் நிரம்பிய ஈடுபாடு கொண்டவர்களாகவும் இவர்கள் காணப்பட்டது மகாநாட்டின் எதிர்பார்ப்பை நிறைவு செய்ததாகவிருந்தது. இந்த வகையில் மகாநாடு எண்ணிய பயன் தந்தது என்று கொள்ளலாம்.

மகாநாட்டையொட்டி நடத்தப்பெற்ற பல்வேறு போட்டிகளிலும் (23ம் பக்கம் பார்க்க)





# Citizenship and Immigration Minister Sergio Marchi resolves cases of failed refugee claimants

அகதிநிலை மறுக்கப்பட்ட பின்னர் மூன்றாண்டுக்கும் மேலாகக் கனடாவில் வசித்துவருபவர்கள் நிரந்தரக் குடியுரிமைக்கு விண்ணப்பிக்கும் சந்தர்ப்பம் அரசாங்கத்தினால் தற்போது வழங்கப்பட்டுள்ளது. இது பற்றிய பூரண விபரங்கள் இக்கட்டுரையில் இடம்பெற்றுள்ளது. விபரமான தமிழ்க் கட்டுரை மூன்றாம் பக்கத்திலுள்ளது.

Citizenship and Immigration Minister Sergio Marchi announced last month the government's intention to accept, as permanent residents, certain failed refugee claimants who have not been removed from Canada over several years and meet specific criteria.

"I will implement regulations by october first"' said the Minister, "So that failed claimants who have been in Canada under removal order for more than three years and have established lives here can apply for permanent residence. People will not be eligible if they are criminals or present a security risk, if they have tried to evade removal in the past, if they have not shown an ability to support themselves, or if they would place an excessive demand on health or social services."

"This government wanted to address the uncertain situation these people faced," Marchi said. "Despite their failed refugee claims, many had their removal deferred by government. They had no right to remain in Canada but they were not removed. The new decision complements the measures announced on May 13, 1994 in response to the Davis/Waldman Report on the treatment of failed refugee claimants".

Failed refugee claimants who do not qualify under these measures will be expected to leave Canada or face removal action by the department.

"Make no mistake. People who have no right to remain in Canada will be removed" Marchi said. "But I also recognize that there are limits how long people can be kept in uncertainity. There are, however, certain countries where, for practical reasons, removals are not carried out at the present time. These are Afghanistan, Burundi, Haiti, and Rwanda. For all other countries, I have directed my officials to carryout all removals in a careful and professional manner as warrented by the circumstances of the case."

There are an estimated 25,000 failed refugee claimants in Canada. The removal of approximately 8.000 has been deferred by government policy: approximately 4,000 are nationals of the People's Republic of China, a further 4,000 are from Cuba, Ethiopia, Eritrea, Guatemala, Haiti, Iran, Somalia and SriLanka. Approximately 17,000 from other countries have not been removed for a variety of reasons, such as the outcome of appeal decisions. Because there are no exit controls from Canada, more precise figures are not available on the potential number of applicants. The number will be further reduced because some of these people will not meet the eligibility criteria. People must apply within 90 days of becoming eligible for consideration under this regulation.

These new provisions will apply on an ongoing basis to persons whose removal order is deferred for a period of three years or more provided the person under removal order complies with the provisions set out in regulation.

There are three general criteria for acceptance under this initiative: eligibility standards, landing criteria, and a time calculation.

(A). Eligibility standards:
Individuals will be eligible to apply if :
* they or their dependents have not been ordered removed for reasons of criminality or security, health risk, or excessive demand on health or social services, or unwillingness or inability to support themselves.
* they have not failed to present themselves for removal in accordance with any removal arrangements made by immigration officials;
* they have not withdrawn or abandoned their claim to refugee status;
* their national government has not refused to issue travel documents or is not being recalcitrant in facilitating Canada's removal order.

(B). Landing Criteria:
* Application in possession of valid identification documents in order to be landed. An exception will be made where the applicant is stateless, or where, owing a breakdown in his or her national government, relevant documents are not available.
* Applicants must provide proof to an Immigration Officer that they have worked legally for a total of at least six months since making their refugee claim. Alternatively, they must proof that they have not been dependent on welfare.
*Applicants will be required to submit a written application within 90 days of becoming eligible. Applications will be handled by mail and processed at the Case Processing Centre in Vegreville, Alberta. They will be available by October 01, 1994. If follow-up in some cases is required, this will be done at local Canada Immigration Centres. Further details on application procedures will be made later.

(C). Calculation of three year eligibility period:

Only individuals who have indicated an intention to make claim to refugee status since January 01,1989 and have done so, and have been continuously present in Canada during the three year period in which they were under a removal order will be eligible to apply.

In general, people who were refused by the Immigration and Refugee Board (IRB) prior to July 07, 1994 will be eligible to apply three years from the date of the IRB's decision. Those rejected by the IRB on or after July 07, 1994 will be eligible to apply three years from the date their removal order becomes effective.

More specifically;
* Persons who have not sought leave to apply to the Federal Court of Canada for judicial review or leave to appeal a negative decision on their refugee claim will be eligible to apply three years from the date of the IRB decision.
* Persons who have denied leave or who have denied a negative decision on their judicial review or appeal prior to July 07, 1994 will be eligible to apply three years after the date on which their IRC decision was given.
* Persons who have been granted leave or commenced judicial review or an appeal prior to July 07, 1994 will be eligible to apply three years following the IRB decision.
* Persons who have applied for leave prior to July 07, 1994 and a decision has not been rendered as of July 07, 1994 on that application may apply three years after the removal order becomes effective (i.e. after all legal proceedings and any stays - statutory or judicial - have terminated). If, however, the decision has been outstanding for more than 12 months, the person may apply three years following the IRB decision.
* Finally, persons who commence an application for leave to apply for judicial review, or for an appeal after July 07, 1994 will be eligible to apply three years after the date on which the removal order becomes effective ( i.e. after all legal proceedings and any stays - statutory or judicial - have terminated).

# பிள்ளைப் பேற்றி(பிரசவம்)னைத் தொடர்ந்து பெண்கள் அனுபவிக்கும் மனச்சோர்வு

எல்லோர் முகத்திலும் மகிழ்ச்சி. விரைவில் தகப்பனாகப் போகும் தகப்பன் முகத்தில் பெருமிதம். மனைவி முகத்தில் நாணமும் பெருமிதமும் போட்டி போட்டன. ஆயிரம் மைல்களுக்கு அப்பால் உள்ள பெற்றோருக்கு தொலைபேசியில் செய்தி போயிற்று. 'கர்ப்ப சோதனை நிருபணமாயிற்று. செப்டம்பரில் வைத்தியசாலை ஒழுங்காயிற்று'. பிரசவ காலம் வரை பல ஆயத்தங்கள்; தீர்மானங்கள். மகனா மகளா என்ற களிப்பூட்டும் கனவுகள். வேலைக்கு லீவு போடும் கணிப்புகள். என்ன பெயர் தெரிவு செய்யலாம் என்ற விவாதங்கள். எப்படி வளர்க்கலாம் என்ற கருத்துப் பரிமாற்றங்கள். இவற்றோடு காலம் விரைவாகக் கழிந்தது.

பிள்ளைப் பிரசவம் சிக்கலின்றிக் கழிந்தது. நண்பர்கள் தினமும் வந்தனர். பரிசுகள் குவிந்தன. கடல் கடந்த கடிதங்களும் அறிவுரைகளும் வந்தன. மீண்டும் வாழ்வு வழமையான சக்கரத்தில் சுழலத் தொடங்கியது. தாய் என்ற புதிய பாத்திரம் ஏற்கனவேயிருந்த மகள், மனைவி, சகோதரி, சிநேகிதி என்பவற்றுடன் இணைய வேண்டியிருந்தது. பெண்ணென்ற பிறவியின் பாரம்பரிய வரைவிலக்கினம் நாளாந்த வாழ்க்கையைச் சிக்கலாக்கியது. தாய்மையின் பண்புகளாகக் கருதப்படும் பொறுமை சகிப்புத் தன்மை, தியாகசிந்தை, மென்மை, சாந்தம் என்பன குறையாடப்பட்ட குணங்களாயின. இல்லை. கைதவறவிட்ட சொத்துகளாயின. சலிப்பும், வெறுப்பும் கோபமும், தனிமை நாடலும் எங்கிருந்தோ வந்து சொந்தம் கொண்டாடின.

வேலைக்குச் செல்லும் கணவன் களைத்து வீடு திரும்பும்பொழுது நாள் முழுவதும் மனதைப் போட்டுக் குழப்பிய எண்ணங்களைப் பரிமாறுவதில் மனைவி தயங்கினாள். சிலசமயம் இது பற்றிச் சாடைமாடையாகத் தெரிவித்த போது, 'நீ வீணாக தேவையில்லாததைப் போட்டுக் குழப்புகிறாய்' எங்கும் போகாமல் வீட்டில் அடைபட்டு இருப்பதால் அப்படி யோசிக்கிறாய்' என்ற கணவனின் பதில் அவள் வாயை அடைத்தது. தன்மீதே சந்தேகம் வந்தது. உண்மையிலேயே இவை என் கற்பனா சக்தியின் விவகாரங்களோ ? அண்மையில் பிள்ளை பெற்ற சகோதரிகள் இவ்வாறு தாம் உணர்ச்சிகளற்ற ஜடங்களாக வற்றிப்போனதையோ, விபரிக்க முடியாத சலிப்பும் விரக்தியும் அனுபவித்ததையோ கூறவில்லையே? ஓய்வு நேரங்களில் வெளியில் செல்லவோ நண்பர்கள் வீட்டுக்குச் செல்லவோ வெறுப்பாக இருந்தது. களைப்பாயிருந்தது. எதிலும் நாட்டம் செல்லவில்லை. தாய் என்ற பாத்திரத்தில் தொக்கி நின்ற எதிர்பார்ப்புகள் பாறாங்கல்லாய்க் கனத்தன. இயந்திரமாய் இயங்க மட்டுமே சக்தி இருந்தது. இரவின் தனிமையில் கணவனின் நெருக்கமும் கசந்தது. சிலசமயம் பிள்ளைப் பேற்றின் உடலியல் மாற்றங்கள் உடலில் நிரந்தர மாற்றங்களை ஏற்படுத்தி விட்டனவோ என்ற சந்தேகம் வித்தாய் ஊன்றி விருட்சமாய் வளர்ந்தது.

மருத்துவ ஆராய்ச்சிகளின்படி 13 பெண்களில் ஒருவர் பிள்ளைப் பேற்றுக் காலத்தைத் தொடர்ந்து மனச்சோர்வு, வாழ்வில் பற்றற்ற போக்கு, தனிமையை நாடல், நாளாந்த விடயங்களில் வெறுப்பு, விரக்தி மனப்பான்மை, சுயவெறுப்பு, மனக்குழப்பம் ஆகிய அறிகுறிகளைக் கொண்ட பிள்ளைப்பேறுகால பின்விளைவுகளால் (Post natal depression) பாதிக்கப்படுகின்றனர் எனத் தெரியவருகிறது. சிலர் ஒருசில மாதங்களில் இம்மனோநிலையில் இருந்து விடுபட்டாலும், பலர் வருடக்கணக்காக இம்மனோநிலையினால் பாதிக்கப்படும் சாத்தியக் கூறுகள் உயர்வானவையே.

உரிய காலத்தில் ஆலோசனைகள், குடும்பம்-சுற்றத்தாரின் புரிந்து கொள்ளும் நடத்தை, இதே போன்ற மனநிலையிலிருந்து பின்னர் விடுபட்ட சக பெண்களின் கருத்துப் பரிமாற்றம் ஆகியன அடிப்படையில் இந்த மனச்சோர்வு அல்லது மனஅழுத்தம் பாரதூரமான விளைவுகளைத் தோற்றுவிக்காது சீரடையும் சாத்தியக் கூறுகள் நிச்சயம் உண்டு என ஆராய்ச்சிகள் காட்டுகின்றன. தகுந்த உதவியும் ஆலோசனையும் உரிய காலத்தில் கிட்டாத சந்தர்ப்பங்களில் இந்தப் பிள்ளைப் பேற்றைத் தொடரும் மனச்சோர்வு நீதிமன்றம் வரை தொடரும் அவலங்களும் காணப்படுகின்றது. இக்கட்டுரையின் காணப்படும் மேற்கோள்கள் தலைப்புச் செய்தி களாக இங்கிலாந்தில் 1979-1989 ஆண்டு காலப்பகுதியில் நடந்த 17 பெண்கள் சம்பந்தமான கொலைகள், தற்கொலைகள் பட்டியலில் இருந்து தெரியப்பட்டவையாகும். இவை யாவும் விசாரணையில் பிள்ளைப்பேறு காலத்தைத் தொடரும் மனச்சோர்வு மன நிலையின் விளைவுகளாகத் தீர்க்கப்பட்டன.

**சுதர்ஷனா**

ரொறன்ரோவில் அண்மையில் நடந்த துயர சம்பவம் எனக்கு என் சொந்த வாழ்வில் அனுபவித்த மனக் குழப்பத்தை நினைவூட்டின. பிறரோடு இது பற்றிப் பேச கூச்சமும் அன்னிய நாட்டுச் சூழலும் தடங்கலாய் இருந்தாலும் மேலோங்கி நின்ற உணர்வு, 'நான் மட்டும் தான் இப்படியான, விசித்திரமான, ஏற்றுக் கொள்ளமுடியாத உணர்ச்சிகளால் பாதிக்கப்படுகிறேன்' என்ற தனிமைப்படுத்தப்பட்ட உணர்வேயாகும்.

முடிவற்ற நாளாந்த கடமைகளும், நிலையற்ற குடிவரவு நிலையும், கணவன் அருகில் இல்லாத தனிமையும் வெறுமையும் பல சமயம் மறுநாள் விடியக்கூடாது என நான் பிரார்த்திக்கும் விரக்திக்கு என்னைத் தள்ளின. ஆதரவான குடும்பமும் நண்பர்களும் எனக்குத் துணையாயிருந்தது எனது பாக்கியம் என்றே கூறவேண்டும். இவைகள் இல்லாதிருந்தால் நான் பத்திரிகைச் செய்தியாகியிருப்பேன்.

அன்னிய நாட்டுச் சூழலில் வழமையான ஆதரவு தரும் சுற்றத்தார் இல்லாத நிலையில், பிள்ளைப் பேற்றைத் தொடரும் முக்கிய காலத்தில் ஆதரவும், அனுபவ முதிர்ச்சியோடு கூடிய வழிகாட்டலும் கிடைப்பது மிக அரிதாகவுள்ளது. பெற்றோராகும் கணவனும் மனைவியும் புதிய குழந்தையின் நாளாந்த நலன், வளர்ச்சி ஆகியன பற்றிக் கலந்தாலோசிக்கவும், புத்திமதி, வழிகாட்டல் பெறவும் சந்தர்ப்பம் இல்லாதவிடத்து முழுக்க முழுக்க குடும்ப வைத்தியர் வழிகாட்டலிலேயே தங்கியுள்ளனர். புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்களிடையில் நிலவும் சந்தேக குணமும், குடும்ப விவகாரங்கள் வைத்தியரிடம் கூடப் பேசப்படக்கூடாது என்ற வைராக்கியமும் ஆலோசனையையும் உதவியையும் பெறப் பெரும் தடையாக அமைகின்றன. அத்துடன், மனநலன் தொடர்பான எந்தவொரு சந்தேகம் இருப்பினும், ஒன்றில், 'போகப்போகச் சரியாகிவிடும்' என்ற அசட்டு நம்பிக்கையும், மனோநலன் பைத்தியக்காரருக்கு மட்டுமே தேவை என்ற தவறான அபிப்பிராயமும், உதவி தேவையான நேரத்தில் உதவிபெற முடியாதபடி தடை-செய்கின்றன. தேவையான நேரத்தில் பொருத்தமான ஆலோசனை, வழிநடத்தல், சிகிச்சை பெறாதவிடத்து நிலைமை எல்லை மீறிப்போவது ஆகியவை நாம் அன்றாட வாழ்க்கையில் காணக்கூடியதாகவுள்ளவை.

நீங்கள் அண்மையில் ஒரு குழந்தைக்குப் பெற்றாராகியிருந்தால், குழந்தைப் பேறானது எவ்வாறான உடலியல் மாற்றங்களைப் பெண்களில் தோற்றுவிக்கிறது என உங்கள் குடும்ப வைத்தியரிடமோ அல்லது கீழ்க்காணும் சமூக உடல் நல நிலையங்கள் மூலமாகவோ ஆலோசனை, வழிகாட்டல், சிகிச்சை பெற முயற்சியுங்கள். சில உடலியல் உளவியல் மாற்றங்கள் உங்கள் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட சுரப்பிகளின் தாக்கத்தின் விளைவாகும். உங்கள் நலன் முக்கியம். உங்கள் நலன் உங்கள் குடும்ப நலனில் தாக்கத்தை ஏற்படுத்தும். முன்னெச்சரிக்கையாக நடவடிக்கைகள் எடுப்பது எப்போதும் வீண்போகாது.

ரொறன்ரோ பெரும்பாகத்தில் அமைந்துள்ள சமூக உடல்நல நிலையங்கள்:

(23ம் பக்கம் பார்க்க)

கவிஞர் கந்தவனம் தரும்

## கனடிய காட்சிகள்

### பழைய நினைவு

எனக்குக் கொஞ்ச நாட்களாகவே ஒரு பெண்ணைப் பற்றிய நினவு. கனவில் வந்து நித்திரையைக் கலைக்கும் அளவுக்கு விஷயம் முற்றிவிட்டது. அன்று அவளைக் கண்டதும் ஒருவித கிளுகிளுப்பில் பழைய நினைவுகளில் நீந்தி.......

கனடாவில் பல விடயங்கள் என்னைப் பழைய நினைவுகளுக்குள்ளாக்கியிருக்கின்றன. உதாரணத்துக்குச் சிலவற்றைச் சொல்லலாம். பனி மழையையோ பனிக்கட்டியையோ பார்க்கும் போதெல்லாம் அவை பற்றி நான் முன்னர் உயர் வகுப்பு மாணவர்களுக்குப் படிப்பித்தவை நினைவுக்கு வரும். பள்ளிக்கூடங்களில் பிள்ளைகள் சாப்பிட்டுவிடும் மிச்சங்களைப் பார்த்தால் இந்தியாவிலும் சில ஆபிரிக்க நாடுகளிலும் நான் பார்த்த வறிய குழந்தைகளின் ஞாபகம் வரும். அகல்வழி நிலையங்களில் நின்று முத்தமிடும் காதலர்களைக் கண்டால் அகநானூற்றுக் காதலர்களின் சந்திப்புகள் கற்பனைத் தேரேறும். குளிரில் நடுங்கும் போதெல்லாம் எப்படா தமிழ்ஈழம் வருமென்றிருக்கும்.

இப்படித்தான் அந்தப் பெண்ணை அன்றைக்குக் கண்டதும் பழைய நினைவுகளில் நீந்த நேர்ந்தது. அவளைப் போன்ற ஒரு பெண்ணுக்கும் எனக்கும் இருந்த உறவு அப்படியே படமாக....

எக்லின்ரன் சாலையில் ரி.ரி.ஸி வசு மேற்கை நோக்கி ஓடிக்கொண்டிருந்தது. ஒரு தரிப்பில் அந்தப்பெண் ஏறினாள். 'ஐயோ' என்பதுபோல வசு மெல்லக் கிரீச்சிட்டது. தாழ்ந்து நிமிர்ந்து ஏங்கித் தயங்கிப் பின் ஒருமாதிரி உன்னி இழுத்து ஓடத் தொடங்கியது. கருப்பினம்; கார்மேகக் கதிரவனின் கதிர்கள் மினுக்க முனையும் பொது நிறம்; பிரமாண்டமான உருவம். மேரு மலை பெற்றெடுத்த பெருஞ் செல்வம். அவள் அந்தக் கதவுகளுக்கூடாக வந்தது ஒரு வகை ஒலிம்பிக் சாதனை தான்.

நான் கம்பராமாயணத்தில் முன்பு உறவாடிப் படித்த தாடகை சடாரென்று முன்வந்து குதித்தாள். அவளின் வருகையைக் கவியரசர் கம்பர் இப்படி விளக்குகிறார்:


சிலம்புகள் சிலம்பிடை செறிந்த கழலோடும்
நிலம்புக மிதித்தனன் நெளிந்த குழிவேலைச்
சலம்புக அனல்தறு கணந்த கனுமஞ்சிப்
பிலம்புக நிலக்கிரிகள் பின்தொடர வந்தாள்.

'மலைகளைப் பரல்களாகப் பெற்றுள்ள சிலம்புகளை அணிந்துள்ள கால்களினால் தரை கீழே போகும்படி மிதித்துக் கொண்டு, அவ்விதம் மிதித்ததால் உண்டான குழிகளிற் கடல்நீர் வந்து புகவும், அனலைப் போன்று அச்சமற்ற இயமனும் அவளைக் கண்டு அஞ்சிப் பாதாளத்துள் ஓடி மறையவும், அசையாத மலைகளும் அவள் வரும் வேகத்தால் ஈர்க்கப்பட்டு, இடம்பெயர்ந்து உடன்வரவும், தாடகை அங்கு வந்தாள்' என்பது இதன் பொருள்.

இவ்விதம் பெரிய சரீரம் உள்ள ஒரு பெண் இருப்பாளா என்ற ஐயம் அன்று இராமனுக்கே ஏற்பட்டது. பின்னர் தாடகையை நேரிற் கண்டதும் அவனது ஐயம் தீர்ந்து போனது உண்மை. ஆனால் எனது சந்தேகம் வளர்ந்து கொண்டேயிருந்தது. இதெல்லாம் வெறும் கற்பனை அல்ல என்பதை அன்று அந்த வசுவுக்குள் ஏறிய அந்தப் பெண் யானை நிரூபித்துவிட்டது. தாடகையின் தோற்றத்தை மட்டுமே அந்தப் பெண் நினைவுபடுத்தினாள். அவளின் குணங்களையோ கொடிய செயல்களையோ அல்ல.

'உருவுகண்டு எள்ளாமை வேண்டும்' - திருக்குறள்.

## ஈழகேசரி ராஜகோபால் எழுதிய 'ஆழிக்குமரன்' நூல்வெளியீடும் ஷர்மினி ராஜகோபாலின் நடன நிகழ்ச்சியும்



ஈ. கே. ராஜகோபால்

இலங்கையின் சிரேஷ்ட பத்திரிகையாளர்களில் ஒருவரும், இங்கிலாந்திலிருந்து வெளிவரும் 'ஈழகேசரி' பத்திரிகையின் ஆசிரியருமான ஈ. கே. ராஜகோபால் எழுதிய 'ஆழிக்குமரன்' நூல் வெளியீடும், ராஜகோபாலின் புதல்வியான ஷர்மினி ராஜகோபாலின் நடன நிகழ்ச்சியும் இந்த (ஆகஸ்ட்) மாதம் 13ம் திகதி சனிக்கிழமை பிற்பகல் ஸ்காபரோ வுபர்ன் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தமிழீழத்தில் வல்வையில் பிறந்து, பாக்குநீரிணையைக் நீந்திக் கடந்து சாதனை புரிந்த ஆனந்தன் தொடர்ந்து பல சாதனைகளை 'கின்னர்ஸ்' புத்தகத்தில் பதித்து தமிழர்களுக்குப் பெருமை தேடித் தந்தவர். பத்தாண்டுகளுக்கு முன்னர் இங்கிலாந்துக்கும் பிரான்ஸிற்குமிடையிலுள்ள ஆங்கிலக் கால்வாயை நீந்திக் கடந்து சாதனை புரிய முயற்சிக்கையில் ஆனந்தனைக் கடலில் வைத்தே காலன் அணைத்துக் கொண்டான்.

ஆனந்தனின் வீர தீர சாதனைகள் நிறைந்த வாழ்க்கை வரலாற்றினைச் சுவையான நூலாகப் படைத்துள்ளார் திரு. ராஜகோபால். யாழ்ப்பாணம் ஈழநாடு பத்திரிகையிலும், கொழும்பு தினகரன் பத்திரிகையிலும் ஆசிரிய பீடத்தில் பணிபுரிந்த ராஜகோபாலின் ' வல்வெட்டித்துறையிலிருந்து அமெரிக்காவுக்குக் கப்பலோட்டிய தமிழர்' என்ற நூல் கடந்த வருடம் கனடாவில் வெளியிடப்பட்டதை வாசகர்கள் மறந்திருக்க மாட்டார்கள்.

ராஜகோபாலின் மனைவி திருமதி. ராகினி ராஜகோபால் தலைசிறந்த நடன ஆசிரியை. இலங்கையில் அரசாங்க பாடசாலைகளில் நடன ஆசிரியையாகப் பணிபுரிந்தவர். இங்கிலாந்தில் தனியார் நடனப் பாடசாலையை நடத்திப் பலருக்கு நடன ஆசிரியையாகத் திகழ்ந்து வருகிறார். தமது மகளான ஷர்மினிக்கும் குருவாக அமைந்து அவரது அரங்கேற்றத்தை மிகச் சிறப்பாக நடத்தி வைத்தவர். செல்வி. ஷர்மினியின் நடன நிகழ்ச்சி ஐரோப்பிய நாடுகள் பலவற்றில் இடம்பெற்றுள்ளது.தந்தை ராஜகோபால் எழுதிய 'ஆழிக்குமரன்' நூல்வெளியீட்டில், மகள் ஷர்மினியின் நடன நிகழ்ச்சி தாயார் ராகினியின் நட்டுவாங்கத்தில் சிறப்பு அம்சமாக இடம்பெறுகிறது.

இந்த விழாவில் கலந்து கொள்வதற்குப் பிரவேசக் கட்டணம் எதுவுமில்லை. விழாவில் பங்குகொள்ள விரும்புபவர்களும், மேலதிக விபரங்கள் வேண்டப்படுபவர்களும் பின்வருபவர்களுடன் தொடர்பு கொள்ளவும். வேலா (283-4546), திரு (920-9250), தீசன் (429-9046).

# ரொறன்ரோ பெருநகரின் அழகுக்கு அழகூட்டும் உல்லாசபுரி - ரொறன்ரோ தீவுகள்

## Summer trips in Toronto - Toronto Islands

ரொறன்ரோ மாநகரில் உல்லாசப் பயணிகளைக் கவரும் இடமாகவும், சிறந்த பொழுது போக்கு இடமாகவும் விளங்கும் மற்றுமோர் சிறப்பு இடமாக ரொறன்ரோ தீவுகள் விளங்குகின்றன.

ரொறன்ரோ நகரின் தென் எல்லையில் ஒன்ராறியோ வாவியினுள் அமைந்துள்ள இத்தீவுகள் வசந்த காலத்தில் இயற்கை வளச் செழிப்பினை அள்ளி வீசும் ஓர் சிறந்த பொழுது போக்கு இடமாகும். Olympic Island, South Island, AlgonQuin Island, Ward's Island, Mugg's Island, Centre Island எனப் பல சிறு தீவுகள் உள்ளடக்கிய தீவுக் கூட்டமே ரொறன்ரோ தீவுகள் என அழைக்கப்படுகின்றன. இவற்றுள் Centre Island, Wards Island என்பனவே முக்கியமானவையாகும்.

ரொறன்ரோ தீவுகளில் காணப்படும் வளர்ந்த மரங்கள், எரிக் கரையோரங்கள், புல்வெளிகள், நீரேரிகள், வனப்புமிகு தோற்றத்தினை மேலும் மெருகூட்டுவனவாக அமைந்துள்ளன. மத்திய தீவின் (Centre Island) தென் எல்லையில் அமைந்துள்ள 1808ம் ஆண்டு கட்டப்பட்ட Old Gibraltar Light House, தென் தீவுக்கு அண்மையில் அமைந்துள்ள The Island Church என அழைக்கப்படும்.

1884ம் ஆண்டு கட்டப்பட்ட St. Andrew தேவாலயம் என்பன வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தனவாகும். Island Paradise Restaurant இங்குள்ள சிறந்த உணவகமாகும். மத்திய தீவின் எல்லையை சார்ந்து கண்ணைக் கவரும் வகையில் பூங்கா அமைக்கப்பட்டுள்ளது. அதனைப் பார்க்கும்பொழுது கனடா பனி உறையும் நாடா என்ற சந்தேகம் எழும்.

மத்திய தீவின் centreville என அழைக்கப்படும் பகுதியில் சிறுவர்களும் வயது வந்தவர்களும் பார்த்தும் பங்குபற்றியும் மகிழ்ச்சியடையக்கூடிய பல நிகழ்ச்சித் திட்டங்கள் உண்டு. ஒவ்வொரு நிகழ்ச்சியில் பங்குபற்றும்பொழுதும் கட்டணம் செலுத்த வேண்டும். எனினும் ஏனைய இடங்களிலுள்ள சிறுவர் நிகழ்ச்சிகளுக்கான கட்டணங்களுடன் ஒப்பிடும்பொழுது இங்கு அறவிடப்படும் கட்டணம் குறைவு என்றே கூறலாம்.

Far enough farm என அழைக்கப்படும் பண்ணையும் பார்த்து ரசிக்கக் கூடிய ஒன்றாகும். இங்கு பல்வேறு வகை விலங்கினங்கள் பரவலாகக் காணப்படுகின்றன. இவற்றைச் சிறுவர்கள் பார்த்து ரசிப்பதனை ஆங்காங்கு காணலாம்.

டெனிஸ் விளையாட்டுப் பிரியர்களுக்கு மத்திய தீவிலுள்ள Hanlans Point Tennis Courts சிறந்த வரப்பிரசாதமாகும். வசந்த காலத்தில் தெளிவான வானிலையின்போது டெனிஸ் விளையாட்டுப் பிரியர்கள் இங்கு விளையாடி மகிழ்ச்சியடைவதனைக் காணலாம். மொத்தத்தில் Centre Island சிறுவர் முதல் பெரியோர் வரை மகிழ்ச்சியுடன் பொழுது போக்கக்கூடிய ஒரு இடமாகும்.

ரொறன்ரோ தீவுகளைப் பார்க்கப்போகும்பொழுது ரொறன்ரோ மாநகரின் துறைமுகப் பகுதியிலிருந்து (Harbour front) ஒன்டாரியோ ஏரியில் பாதை மூலம் பயணம் செய்தல் ஓர் சுவாரஸ்யம் மிக்க அனுபவமாகும். துறைமுகப் பகுதியிலிருந்து ரொறன்ரோ தீவுகளின் மூன்று முனைகளுக்குப் பாதை மூலம் பயணம் செய்யும் சேவை தினமும் நடைபெறுகிறது. ஒரு பாதைச் சேவை ward's Islandக்கும் ஏனைய இரு பாதைச் சேவைகளும் மத்திய தீவின் மத்திய முனை, ஹலன்ஸ் முனை ஆகிய இரு இடங்களுக்கும் நடைபெறுகின்றன. பாதைச் சேவைக் கட்டணமாக வயது வந்தவர்களுக்கு மூன்று டாலர்களும், முதியவர்களுக்கு சலுகைக் கட்டணமாக ஒன்றரை டாலர்களும், பதினைந்து வயதுக்குட்பட்ட ஏனையவர்களுக்கு ஒரு டாலரும் அறவிடப்படுகின்றது.

**வித்தியா**

தினமும் காலை 6:30 மணி முதல் மாலை 11:30 மணி வரை ஏறத்தாழ அரை மணி நேரத்துக்கு ஒரு தடவை நடைபெறும் இப் பாதைச் சேவை மூலம் நாள்தோறும் பல்லாயிரக்கணக்கான உல்லாசப் பயணிகள் ரொறன்ரோ தீவுகளுக்குச் சென்று வருகின்றனர். குறிப்பாக ஜுலை, ஆகஸ்ட் மாதங்களில் கனடாவில் வசிப்பவர்கள் மட்டுமன்றி அமெரிக்கா, ஐரோப்பா ஆகிய நாடுகளில் வசிப்பவர்களும் தமது வசந்தகால விடுமுறை நாட்களை மகிழ்ச்சியாகப் பொழுது போக்க இங்கு செல்கின்றனர்.

ரொறன்ரோ தீவுகளுக்குச் செல்பவர்கள் துறைமுகப் பகுதிக்குத் தங்கள் சொந்த வாகனம் மூலமோ, அல்லது ரொறன்ரோ போக்குவரத்துக் கமிஷன் நடத்தும் போக்குவரத்துச் சேவை மூலமோ செல்ல முடியும். சொந்த வாகனங்களில் செல்பவர்கள் தமது வாகனங்களை நிறுத்துவதற்கு துறைமுகப் பகுதியில் வாகன தரிப்பிட வசதியுண்டு.

பொதுப் போக்குவரத்தினைப் பயன்படுத்துபவர்கள் subway மூலம் யுனியன் புகையிரத நிலையத்துக்குச் சென்று அங்கிருந்து 604 இலக்க பஸ் சேவையினைப் பயன்படுத்தி துறைமுகப் பகுதிக்குச் செல்லமுடியும்.

உல்லாசப் பயணிகளின் பாதுகாப்புக் கருதி மோட்டார் வாகனங்களையோ துவிச்சக்கர வண்டிகளையோ ரொறன்ரோ தீவுகளுக்குக் கொண்டு செல்வது தடைசெய்யப்பட்டுள்ளது. மேலும் பாதையில் பயணம் செய்யும் பொழுது புகைத்தலும் தடை செய்யப்பட்டுள்ளது. உல்லாசப் பயணிகளின் நன்மை கருதி அவசர வைத்திய சிகிச்சைப் பிரிவு, பொலிஸ் பாதுகாப்புப் பிரிவு, காணாமல் போகும் பொருட்கள் மற்றும் ஆட்கள் பற்றித் தகவல் சேவைப் பிரிவு என்பனவும் செயற்பட்டு வருகின்றன.

பல தீவுகள் உள்ளடக்கிய ரொறன்ரோ தீவுகளில் உல்லாசப் பயணிகளைக் கவர்வதில் Centre Island முக்கியத்துவம் பெற்றுவிட்டதனால் அதன் பெயரே மக்கள் மனதில் இடம்பெற்றுவிட்டது. வசந்த காலத்தின்பொழுது, வெளியிட பொழுது போக்கு இடங்களில் முக்கியத்துவம் பெற்ற Centre Island பற்றி மேலதிக விபரங்கள் பெறவிரும்பினால் 392-8193 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம்.

## றிச்மன்ட்ஹில் இந்து ஆலய பெருமாள் திருவிழா

றிச்மன்ட்ஹில் இந்து ஆலய பெருமாள் வருடாந்தத் திருவிழா இந்த மாதம் 22ம்திகதி கொடியேற்ற உற்சவத்துடன் ஆரம்பமாகும். அன்றைய தினம் காலை பத்து மணிக்குக் கொடியேற்றம் நடைபெறும். திருவிழாக் காலங்களில் பகல் உற்சவத்தின்பொழுது அபிஷேகம், சுவாமி பூஜை, புறப்பாடு ஆகியன பகல் பத்து மணிக்கும், இரவு உற்சவத்தின்பொழுது மாலை ஆறு மணிக்கும் இடம்பெறும். பத்து நாட்களுக்குத் திருவிழா நடைபெற்று ரதோற்சவம், தீர்த்தோற்சவம், பூங்காவன உற்சவத்துடன் முடிவடையும்.

# எமது பெற்றோர், முதியோரின் பற்களைப் பேணிப் பாதுகாக்க வேண்டியது இளஞ் சந்ததியினரின் கடன்

## Dental care for our old parents

பல் வைத்தியம், பல் நோய்கள் சம்பந்தமான கேள்விகளுக்கு பல் வைத்தியத் துறையில் இலங்கையிலும், வெளிநாடுகளிலும், கனடாவிலும் இருபது வருடங்களுக்கு மேல் அனுபவம் பெற்ற டாக்டர் அ. (ஷண்) சண்முகவடிவேல் தொடர்ந்து பதிலளித்து வருகிறார். கேள்விகளை தமிழர் தகவல் முகவரிக்கே அனுப்ப வேண்டும். கேள்வி கேட்பவர்களின் பெயர், முகவரி ஆகியன பிரசுரிக்கப்பட மாட்டாது.

எம் மத்தியில் வாழும் முதியோரின் எண்ணிக்கை நாளாந்தம் அதிகரித்து வருகிறது. எமது நாட்டில் தொழில் புரிந்து இளைப்பாறி இங்கு வந்துள்ள எமது பெற்றோரின் மன, உடல் ஆரோக்கியம் என்பன பற்றி நாம் அக்கறை கொள்ள வேண்டியது அவசியமாகும்.

அதற்கேற்ப அவர்களின் பற்களையும் பரிசோதனை செய்து அவற்றைப் பேண வேண்டியது இளஞ் சந்ததியினரின் கடன் என்றே நான் கருதுகின்றேன். இந்த வகையில் அரசு இவர்களுக்கென (seniors) ஒரு திட்டத்தை ஏற்படுத்தாதது கவலைக்குரியதாகும். வயது வந்த எமது தாய் தந்தையினரின் பற்களுக்குத் தேவைப்படும் சிகிச்சைக்கு உதவ அரசு தயங்குவது ஏன் என்று தெரியவில்லை. இது பற்றி அரசியல் தலைவர்களுடன் சமூகங்களின் தலைவர்கள் உரையாடி விடயத்தை அவர்களின் கவனத்துக்குக் கொண்டுவர வேண்டும்.

பற்சிகிச்சைகளை இலவசமாகப் பெறுவதற்கும் ஒரு சிலருக்கே முடிகின்றது. பல பெற்றோர்கள் ஸ்பொன்ஸரில் வந்த காரணத்தினால் சமூகநல உதவி பெற முடிவதில்லை. வெல்∴பெயர் பெறுபவர்களுக்கு இலவச அத்தியாவசிய சேவை வழங்கப்படுகின்றது. குடும்ப நல உதவி பெறுபவர்களுகளில் Dental Identification பல் கார்ட் உள்ளவர்களுக்கு சில இலவச சிகிச்சைகள் வழங்கப்படுகின்றன.

வயது முதிர்ந்த எமது பெற்றோர்கள் சிலர் தாம் பல் வைத்தியரிடம் செல்வதால் தமது பிள்ளைகளுக்கு மேலும் சுமையினைக் கூட்டி விடுவோமோ என்று எண்ணுகிறார்கள்.

இலவச பற் சிகிச்சைக்குரிய வசதியில்லை என்ற காரணத்தினால் பற்சிகிச்சைகளைத் தாமதம் செய்வதில் அர்த்தமில்லை. இவர்களில் பலர் பல் வைத்திய பரிசோதனைக்குத் தமது வாழ் நாளில் இதுவரை காலம் சென்றதாகத் தெரியவில்லை.

எமது வயது வந்த பெற்றோரின் பற்கள் சுக நிலையில் இருப்பின் அவர்களுக்கு ஏற்படும் பல்வலிகளையும், அசௌகரியங்களையும் பெருமளவு குறைக்க முடியும். வயது வந்த காரணத்தால் பற்களைக் கவனிக்க வேண்டியதில்லை என்ற கருத்து தவறாகும்.

எனவே எமது முதிய சமூகத்தினரின் வாய், பற்கள் என்பன கண்காணிக்கப்பட வேண்டியது அவசியமாகும். அவர்களின் தேவைக்கேற்ப பற்களைச் சுத்தம் செய்யவோ, பழுதடைந்த அல்லது ஈடாடும் பற்களை அகற்றவோ, நிரப்பவோ, இழந்த பற்களுக்குப் பதிலாகப் பொய்ப் பற்கள் கட்டவோ தயக்கம் காட்டுவது கவலைக்கிடமானதாகும்.

இனி இந்த மாதக் கேள்வி பதில்களுக்கு வருவோம்:

கேள்வி: கொடுப்புப் பற்களில் இரண்டினை அகற்றினால் அந்த வெற்றிடத்தை நிரப்ப பொய்ப் பற்கள் கட்ட வேண்டுமா? அவ்வாறு பொய்ப் பற்களைக் கட்டாதவிடத்து ஏதாவது பாதகமான விளைவுகள் ஏற்படுமா?

**டாக்டர் அ.சண்முகவடிவேல்**
**குடும்ப பல் வைத்தியர்**

பதில்: எந்தக் கொடுப்புப் பற்கள் அகற்றப்பட்டவை என்று நீங்கள் குறிப்பிடவில்லை. இரண்டு பற்களை இழந்திருப்பின் அதற்குப் பதிலாகப் பொய்ப் பற்கள் கட்டாயம் கட்டப்பட வேண்டும் என்பதே எனது கருத்து. அவை இரண்டும் கடைசிப் பற்களாக இருப்பின் (2nd and 3rd molar teeth) அவற்றின் கீழ்/ மேல் தாடையில் பற்கள் ஏற்கனவே பிடுங்கப்பட்டிருக்கின்றனவா, மற்றும் இதர பற்களின் நிலைமை என்ன என்பது பற்றி அறிந்திருப்பின் திட்ட வட்டமான பதிலை உங்களுக்குக் கூறமுடியும்.

நீக்கப்பட்ட பற்களுக்குப் பதிலாகப் பல் கட்டாமல் விடுவதால் பல விரும்பத்தகாத விளைவுகள் ஏற்படுகின்றன. பற்கள் இல்லாத பக்கத்தால் சரிவர உணவை அரைத்து உண்ண முடியாது. இதனால் அந்தப் பக்கத்திலுள்ள பற்களில் விரைவில் காவி படிகின்றது. குறிப்பிட்ட பற்களுக்கு எதிரே (மேலே அல்லது கீழே) உள்ள பற்கள் இறங்கி அல்லது உயர்ந்து வருகின்றன. அருகிலுள்ள பற்களின் நகர்வால் இதர பற்களிடையே இடைவெளிகள் ஏற்படுகின்றன.

கேள்வி: பொய்ப்பற்கள் கட்ட வேண்டிய ஒருவர் வெல்∴பெயரில் இருந்தால் அந்தச் செலவினை அரசாங்கம் பொறுப்பேற்குமா? பற்கள் மீதான எவ்வகைக் கருமங்களுக்கு நாங்கள் இலவச சேவையினைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதை அறியத் தருவீர்களா?

பதில்: மேற்கேட்கப்பட்ட இரண்டு கேள்விகளுக்கும் தமிழர் தகவலின் ஜுன் மாத இதழில் விபரமாகப் பதில் எழுதியுள்ளேன். Welfare மற்றும் Family Benefit பெறுபவர்களுக்கு இலவசமாகப் பல் கட்டுவதற்கு உதவி வழங்கப்படுகின்றது. அத்துடன் இவர்களின் உடைந்த பொய்ப் பற்களை திருத்துவதற்கும், புதுப்பிக்கவும் (relining) முடியும்.

இவர்கள் பல் வைத்தியரிடம் சென்று காண்பித்துத் தமக்குப் பொய்ப் பற்கள் கட்ட வேண்டியது அவசியம் என்ற கடிதத்தைப் பெற்று தமது நலன் புரியும் ஊழியரிடம் கொடுக்கும் பட்சத்தில் பல் கட்டுவதற்கு வேண்டிய மதிப்பீட்டுப் பத்திரம் (estimate) அனுப்பப்படுகிறது. இப்பத்திரம் பொதுவாக அனுப்பப்படுகின்றது. இதனைப் பல் வைத்தியர் நிரப்பி மீண்டும் உரிய இடத்துக்கு அனுப்பியதும் பல் கட்டுவதற்கான அனுமதி கொடுக்கப்படுகின்றது.

வெல்∴பெயர் பெறுபவர்களுக்கு அத்தியாவசிய நோவை நீக்கும் சிகிச்சைகள் மட்டுமே இலவசமாக வழங்கப்படுகின்றது. அவையாவன:

பரிசோதனை, எக்ஸ் - கதிர்ச் சோதனை, மருந்து வகைகளைப் பெறுதல், பழுதடைந்த பற்களை அகற்றுதல், நிரப்புதல், முன்பற்களுக்கு வேர் நிரப்புதல், நோவுள்ள ஞானப் பற்களைக் கழற்றுதல் என்பனவாகும்.

சமூகநல உதவி பெறும் குழந்தைகளுக்கு வேறு திட்டத்தின் கீழ் இந்தச் சலுகைகள் வழங்கப்படுகின்றன. இவர்கள் தமது பகுதியிலுள்ள சுகாதாரக் கந்தோருடன் தொடர்பு கொண்டு சிகிச்சைக்குரிய பத்திரம் பெறவேண்டும். Family Benefit பெறுபவர்களில் Dental Identification Card (பற்சிகிச்சைப் பத்திரம்) உள்ளவர்களுக்கே இலவச பற்சிகிச்சை வழங்கப்படுகின்றது.



# தமிழ் மக்களின் தொடர்புப் பிரச்சனைகளை ஆராய்வதற்கான புதிய கூட்டத் தொடர்


றொறன்ரோ பெரும்பாகத்தில் மிகக் கூடுதலான அகதிகளை வரவேற்கும் நகரமாக ஸ்காபரோ மாற்ற மடைந்து வருவதை அண்மைக்காலப் புள்ளிவிபரங்கள் காட்டி நிற்கின்றன. இதனால் பெருந்தொகை யான வெளிநாட்டவர்கள் ஒன்றிணையும் ஒரு பிரதேசமாக ஸ்காபரோ காட்சி தருகின்றது.


இந்தப் பின்னணியில், ஸ்காபரோவில் குடியேறும் பல்லின மக்களிடையேயும் நெருங்கிய தொடர்பினை ஏற்படுத்தவும், இவர்களுக்கிடையில் புதிய நெருக்கத்தினை ஏற்படுத்தவும் தனியான நிகழ்ச்சித் திட்ட மொன்று ஸ்காபரோ கத்தோலிக்க குடிவரவு நிலையத்தின் மேற்பார்வையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. சுமார் பத்துக்கும் அதிகமான இனங்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் இந்தத் திட்டத்தில் தமிழர் களின் பிரதிநிதித்துவ அமைப்பாக ஈழத்தமிழர் தகவல் நிலையம் சேர்ந்துள்ளது.


இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழான முதற்கூட்டம் ஜூலை மாதம் பத்தாம் திகதி கத்தோலிக்க குடிவரவு நிலைய மண்டபத்தில் நடைபெற்றது. மேற்படி நிலையத்தின் குடியமர்வுச் சேவை ஆலோசகர் திரு. எஸ். திருச்செல்வம், பிராந்திய இயக்குனர் மிராண்டா பின்ரோ, திட்டத்தின் இணைப்பதிகாரி கேற் றோஜர்ஸ் ஆகியோர் ஆரம்பத்தில் இந்தத் திட்டத்தின் அடிப்படை நோக்கங்களை விளக்கிக் கூறினர்.


முதற்கட்ட நிகழ்ச்சியில் சேக்கம், முதுதமிழர் மன்றம், கனடா தமிழர் தேசிய மன்றம், ஈழத்தமிழர் தகவல் நிலையம் ஆகிய அமைப்புகளின் பிரதிநிதிகள் தங்கள் கருத்துகளை முன்வைத்தனர். திருமதி. றொசலின் இராசநாயகம், திரு. இராசநாயகம், திரு. நா. சிவலிங்கம், திருமதி. ஜனனி சிவலிங்கம், திருமதி. புஷ்பா சீவரத்தினம், திரு. அகஸ்ரின் ஜெயநாதன், திரு. எஸ். தியாகராஜா, திரு. அன்ரன் கனகசூரியர், திரு. நாதன் சிறீதரன், 'சங்கமம்' இளையபாரதி, 'சூரியன்' ராஜவர்மன், குயல்ப் பல்கலைக் கழக சிஸிலியா இராசநாயகம், கால்ரன் பல்கலைக் கழக டொமினிக் தம்பிப்பிள்ளை ஆகியோர் இவர்களில் முக்கியமானவர்கள்.

இரண்டாம் கட்ட நிகழ்வு, குழுநிலைக் கூட்டமாக இடம்பெற்றது. பொதுமக்களின் பிரதிநிதிகள் தங்கள் கருத்துக்களை இங்கு தெரிவித்தனர். இதனடிப்படையில் பல பரிந்துரைகள் பதிவு செய்யப்பட்டன. இது தொடர்பான இரண்டாவது கூட்டத்தை இவ்வாண்டின் இறுதிக் காலாண்டில் நடத்த முடிவானது. முதற் கூட்டத்தில் பங்கு கொண்ட சிலரை இங்குள்ள படங்களில் காணலாம்.









# மாணவர் சித்திக்குரிய தராதரங்கள்: பிரச்சனைக்கு தீர்வுகாண, பெற்றோருக்கு தனியான ஓர் கையேடு

# HOW IS YOUR CHILD DOING IN SCHOOL

பாடசாலையிலிருந்து உங்கள் பிள்ளைகளின் தேர்ச்சி அறிக்கைகள் இது வரை வந்திருக்க வேண்டும். வெவ்வேறு கல்விச் சபைகளின் தேர்ச்சி அறிக்கைகள் கையாண்டிருக்கும் முறைகள் வித்தியாசமானவை. தேர்ச்சி அறிக்கைகளிலிருந்து உங்கள் பிள்ளையினது திறன்களை அறிந்து கொள்ள முடியுமா என்பது சந்தேகமே. பெற்றோர்களுக்குப் பிள்ளைகளின் குறைகளைச் சொல்வதிலும் பார்க்க, அவர்களின் நிறைகளைக் கூறி உற்சாகப்படுத்த வேண்டும் என்ற நல்லெண்ணத்தாலும், சிக்கலான கல்வியியல் சமபந்தமான வார்த்தைப் பிரயோகங்களையும், பிள்ளைகளின் உண்மையான கல்வித் திறனை மதிப்பீடு செய்ய முடியாத நிலைக்கு இத் தேர்ச்சி அறிக்கைகள் செய்து விடுகின்றன. இதனைப் பற்றி இன்னொரு சந்தர்ப்பத்திலே எழுதலாமென எண்ணுகிறேன். தேர்ச்சி அறிக்கையைப் பார்க்கின்ற பொழுது பெற்றோர் மனப்பயம் இல்லாமல் பார்க்கலாம். காரணம் பிள்ளை கட்டாயமாக வகுப்பேற்றப்பட்டிருப்பார்.

பிள்ளைகள் எதனைப் படித்தனர்? எவ்வளவு படிக்க வேண்டும்? எத்துணை தெரிந்து வைத்துள்ளனர்? என்பது எதனையுமே தெரியாமல் இருக்கலாமே என்பது பெற்றோர்களின் அங்கலாய்ப்பு. "எமது ஊரில் உள்ளது போன்று பாட நூல்கள் இல்லையே, இருப்பினும் அவற்றினைப் பார்த்து என்றாலும் பிள்ளைகளுக்கு உதவலாமே" என்பது தாய் தந்தையரது விசாரம்.

பெற்றோரின் பாரிய இக் கவலையைத் தீர்ப்பதற்கு வடக்கு யோர்க் கல்விச் சபை ஓரளவு முனைந்துள்ளது. "மாணவன் சித்தியடைவதற்கு வேண்டிய தராதரங்கள்", "standards for student success" என்ற தலைப்பிலே சிறிய ஓர் கையேட்டினைச் சென்ற கல்வி ஆண்டின் பிற்பகுதியில் பிரசுரித்துள்ளது. ஆங்கில மூலத்தில் உள்ள இப்பிரசுரம் வடக்கு யோர்க் பாடசாலைகள் எல்லாவற்றிலும் அனுப்பப்பட்டு பெற்றார்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன. இக் கையேடு இப்பொழுது 15 மொழிகளில் பிரசுரிக்கப்படவுள்ளது. ஜனவரி மாதம் வரையில் தமிழ் மொழியில் உள்ள கையேட்டினைப் பெற்றோர் பார்க்க முடியும்.

ஒன்ராறியோ மாகாண கல்வி அமைச்சும் சென்ற வருடம் பெப்ரவரி மாதத்திலே 1 - 9ம் தரம் வரை "பொதுவான பாட விதானம்" என்ற விபரமான கைநூல் ஒன்றினை வெளியிட்டிருந்தது. அதில் அத்தியாவசியமான விபரங்களிலும் பார்க்க வார்த்தை ஜாலங்களுக்கே முக்கியத்துவம் தந்ததாக பலர் கருதினர். இதனைப் பொறுமையுடன் வாசித்து விளங்க எத்தனை பெற்றோர்ளுக்கு, ஏன்? ஆசிரியர்களுக்கு விளங்கிக் கொள்ள முடியுமா? ஆகவே அமைச்சு அதனை மீண்டும் மாற்றி அமைக்க முனைந்துள்ளது. வடக்கு யோர்க் கல்விச் சபை, கல்வி அமைச்சின் கை நூலை அடிப்படையாக வைத்து மிக எளிமையாகவும், சுருக்கமாகவும் ஒரே பார்வையில் கிரகிக்கக் கூடியதுமான இக்கையேட்டினை ஆக்கியுள்ளது பாராட்ட வேண்டியது!

குறிப்பிட்ட வகுப்புக்களிலேயுள்ள மாணவர்களிடமிருந்து எத்தக்மைகளை கல்விச்சபை எதிர்பார்க்கிறது என்ற விபரங்களை இப்பிரசுரம் எடுத்துக் கூறுகிறது. வடக்கு யோர்க் கல்விச் சபையின் எதிர்பார்ப்புக்களையே இக்கையேடு விபரிக்கின்ற போதும் கல்வி அமைச்சினது இலக்குகளையே மையமாகக் கொண்டு தயாரிக்கப்பட்டமையால், ஏனைய கல்விச் சபைகளின் பாடசாலைப் பெற்றோர் களும் இதனைத் தெரிந்து வைத்திருத்தல் பிள்ளைகளின் கல்விச் சித்திக்கு பெரிதும் உதவும்.

கல்வி அமைச்சு வெளியிட்ட கைநூலிற்கும், வடக்கு யோர்கினத்திற்குமிடையே சில அடிப்படையான வேறுபாடுகள் இருக்கவே செய்கின்றன.

**பொ. கனகசபாபதி**
மகாஜனா முன்னாள் அதிபர்

கல்வியமைச்சின் வெளியீடு 1-9 ஆம் தர மாணவர்களை மையப்படுத்தியதுடன், 3ஆம், 6ஆம், 9ஆம் தரங்களில் உள்ள மாணவர் களிடம் எதனை எதிர்பார்க்க முடியுமென விளம்புகிறது. வடக்கு யோர்க் கல்விச் சபை பாலர் கீழ்ப்பிரிவு தொடக்கம் 9 ஆம் தரம் வரையுள்ள மாணவர்களை மையப்படுத்தி, பாலர் கீழ்/மேல் பிரிவு, 1ஆம் தரம் தொடக்கம் 3ஆம் தரம் வரை, 4ஆம் தரம் தொடக்கம் 6ஆம் தரம் வரை, 7ஆம் தரம் தொடக்கம் 9ஆம் தரம் வரை என நான்கு பிரிவுகளாக வகுத்து எதிர்பார்புக்களை தருகின்றது.

கல்வி அமைச்சின் கைநூலிலே பொதுவான பாடவிதானம் என்ற தலைப்பின் கீழ் மொழி, கலைகள், ஒருவரும் அவர் சமூகமும், கணிதம், விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் என்ற பாடக்கூறுகளை மையமாக வைத்துள்ளது. வடக்கு யோர்க் கல்விச் சபையின் வெளியீடு "மாணவர்களின் பாடசாலை சித்தி, எழுத்தறிவு, கணிதம் ஆகியவற்றைத் தளமாக வைத்தே ஆரம்பமாகிறது" என்ற முன்னுரையுடன் தொடங்கி வாசிப்பு, எழுத்து, எழுத்துக் கூட்டல், இலக்கணம், கணிதம் ஆகிய ஐந்து முக்கிய திறன்களில் எதிர்பார்ப்புக்களைத் தருகிறது.

வடக்கு யோர்க்கின் கையேடு முழுமையானது என்று கூறமுடியாது போனாலும், எங்கே உள்ளோம் எனத் திக்குத் திசை தெரியாது பரந்த கடலிலே தத்தளித்துக் கொண்ட பெற்றோருக்கு ஒரு சிறு மிதப்புக் கிடைத்த மாதிரி உள்ளது என நிம்மதியடையலாம். ஒவ்வொரு வகுப்பின் முடிவிலேயும் ஒரு மாணவனிடம் எதனை எதிர்பார்க்க முடியுமென வகுப்பு ரீதியாக தரப்படவில்லை என்கிற குறைபாடு உண்மையே. ஆனால் பெற்றோர்களின் அங்கலாய்ப்புக்களை ஓரளவிற்கேனும் போக்குதற்கு இக் கையேடு உதவுகிறது என்பது போற்றுதற்குரியது.

பெற்றோர்கட்கு ஒரு எச்சரிக்கையொன்றை முதலில் கூறுகிறது. "குறிப்பிட்ட ஒரு வயதிலே மாணவன் ஒருவனிடம் எதனை நாம் எதிர்பார்க்கிறோம் என்பதை இங்கு எடுத்துக் கூறிய போதிலும், ஒவ்வொரு மாணவனும் கல்வி அறிவினைப் பெறுகின்ற வேகமும், தன்மையும் மாணவனுக்கு மாணவன் வேறுபடவே செய்யும். இதனை மனதிற் கொண்டே தான் ஆசிரியர்கள் ஒவ்வொரு மாணவனையும் அவனது தனிப்பட்ட ஆற்றல்கள், தேவைகளை அறிந்து கல்வி புகட்டுகின்றனர். பெற்றோர்கள் இதனை உணர்ந்து கொள்ளுதல் மிகவும் அவசியமானது என்கிறது கையேடு.

சில முக்கியமான எதிர்பார்ப்புக்களை இங்கு நான் தருகிறேன். இதனோடு உங்கள் பிள்ளைகளின் திறன்களை ஒப்பிட்டுப் பார்த்தீர்களென்றால் அவரைப் பற்றிய தெளிவான அபிப்பிராயம் ஏற்படமுடியும்.

பாலர் கீழ்ப்பிரிவு, மேற்பிரிவு(4-5வயது)

வாசிப்பு
வீதிகளிலேயுள்ள நிறுத்து, வெளியே போன்ற அறிகுறிகளை வாசித்தல், எழுத்துக்களைக் கண்டு அவற்றின் உச்சரிப்புக்களை தெரிந்து கொள்ளுதல், சிலர் சிறுகதைகளைக் கூட வாசிக்க முனையலாம்.

எழுத்து
தனது பெயரை எழுதுவார், தனது எண்ணங்களையும், சொற்களையும் படங்கள் மூலமோ, வெறும் கிறுக்கல்கள் மூலமோ வெளிப்படுத்துதல், சிலர் சொற்களையும் எழுதுவார்கள்.

எழுத்துக் கூட்டல்
சில எளிமையான சொற்களை பிழையின்றியும், வேறு சிலவற்றை முதல் கடைசி எழுத்துக்களையும் எழுதமுடியும். அகராதி (27ம் பக்கம் பார்க்க)

# றொறன்ரோவில் வாழும் சைவ மக்களிடையில் புத்துணர்வை ஏற்படுத்திய சிவதீட்சை வைபவம்

றொறன்ரோவில் வாழும் சைவ மக்களுக்கென தனியான ஒரு சிவதீட்சை வைபவம் கடந்த மாதம் பதினாறாம் திகதி லான்ட்ஸ்ரவுண் தமிழர் கூட்டுறவு இல்ல மண்டபத்தில் நடத்தப்பெற்றது. கனடாவில் பல ஆண்டுகளாகச் சமயத் தொண்டாற்றிவரும் ஸ்ரீ விஜயலட்சுமி வாசா, ஸ்ரீ கௌரி மங்கள சேவை ஆகிய நிறுவனங்கள் இந்த வைபவத்தினை ஏற்பாடு செய்திருந்தன.

சைவ சித்தாந்த ஆராய்ச்சி மகநாட்டில் கலந்து கொள்ளவென இங்கு வருகை தந்திருந்த கிரியா கலாமணி, சித்தாந்த கலாநிதி, சிவாகமஞான சாகரம் சிவஸ்ரீ நா. சோமாஸ்கந்தக் குருக்கள் மூலம் தீட்சை வழங்கும் வகையில் இந்த நிகழ்ச்சி ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது பாராட்டுதற்குரியதாகும். சிவாகம முறைப்படியான பூஜை வழிபாடுகளைத் தொடர்ந்து சுமார் இருபத்தைந்து பேர் வரை சிவதீட்சை பெற்றனர்.



இந்த வைபவத்தின்பொழுது சிவஸ்ரீ சோமாஸ்கந்தக் குருக்கள் அவர்கள் சிவதீட்சையின் தத்துவத்தைச் சுருக்கமாக விளக்கிக் கூறினார். அப்போது அவர் முக்கியமாகத் தெரிவித்ததாவது.


" தீட்சை என்பதற்கு அஞ்ஞானத்தைப் போக்குவது எனவும், பாபங்களை எரிப்பது எனவும், உறுதியான பக்தியை உண்டு பண்ணுதல் எனவும், பலவித கருத்துகள் உண்டு.

ஆயினும் மிகவும் எளிமையாக அதனை விளக்க வேண்டுமாயின், கடவுளை எப்படி மனதில் உறுதியாக நினைத்து, நியதியாக என்ன மந்திரத்தைக் கூறி தியானம், ஜெபம் ஆகியவற்றைச் செய்வது என்பதனை எமக்குக் குரு உபதேசிப்பதாகும்.

மூல மந்திரம் ஆகிய திருநாமத்துடன் கடவுளின் பரத்துவம் ஆகிய பெருமைகளை மனதில் எண்ணும் வகையில் அவரது ஐந்து திருமுகங்களையும், ஆறு அங்கங்களையும் தனித்தனி நாமங்களாக எமக்கு உபதேசம் செய்வார்.

கடவுள் எரிகின்ற தீப்பிழம்பு போல ஜோதி வடிவாக விளங்குகின்றார். அவரை மேற்கு, வடக்கு, தெற்கு, கிழக்கு, ஆகாயம் ஆகிய ஐந்து திக்குகளிலும் தனித்தனி நின்று நோக்குவோமானால் அந்த ஜோதி முறையே பிரம்மாவாகவும் விஷ்ணுவாகவும், ருத்திரனாகவும், மகேஸ்வரனாகவும், சதாசிவமாகவும் காட்சி தருவதை உணர்ந்த ஞானிகள், அவரே ஒன்றாகவும், பலவாகவும் நீக்கமற நிறைந்துள்ள தெய்வமென உறுதிபூண்டு வழிபட்டனர்.

எல்லாவற்றையும் கடந்தும், உள் நிறைந்தும் விளங்குவதனால் கட+உள்= கடவுள் என அழைக்கின்றோம். கடவுளின் வடிவம் அன்பு. அன்பும் சிவமும் ஒன்றே. 'அன்பே தெய்வம். ஆகவே, கடவுள் என்றாலும் சிவம் என்றாலும் ஒன்றே என எமது மனதில் உறுதிப்படுத்துவதே குரு நமக்குத் தீட்சை செய்யும்போது உபதேசிக்கும் மந்திரப் பொருளாகும்" என்று கூறினார். வைபவ இறுதியில் ஸ்ரீவிஜயலட்சுமி வாசா நிறுவனத்தினால் சிவ தீட்சை பெற்றவர்களுக்கும் பார்வையாளர்கள் அனைவருக்கும் மதிய போசனம் வழங்கப்பட்டது. (புகைப்படங்கள்: ஸ்ரீ கௌரி மங்கள சேவை)





# What you should know about your Eyesight?

## Does using a computer damage the eyes?

## உங்கள் கண்பார்வையினைப் பற்றி நீங்கள் தெரிந்திருக்க வேண்டியவை

கம்பியுட்டர் பாவிப்பதால் கண்பார்வை கெடுகின்றதா? டெலிவிஷனுக்கு முன்னால் மிக அண்மையில் நின்று அதனைப் பார்ப்பதால் குழந்தைகளின் கண்களுக்குப் பாதிப்பு ஏற்படுகின்றனவா? என்பன போன்ற சந்தேகங்களுக்கு கண் டாக்டர்கள் அளித்த பதில்கள் இங்கே தரப்பட்டுள்ளன. (நன்றி: கனடியன் ஸீன்)

The following information is supplied by the Canadian Ophthamological Society which represents medical eye doctors.

Q: Does using a computer damage the eyes?

A: Using computer or video display terminals (VDT's) will not harm the eyes. However, eye strain or fatigue can develop with prolonged periods of any close work or reading. Taking breaks and looking up or across the room at frequent intervals usually relieves the strain. If vision blurs tire easily, they should be examined by an ophthalmologist.

Q: What effect can ultraviolet rays have on the eyes?

A: There are good scientific reasons to be concerned that ultraviolet absorption by the eyes may contribute to age- related changes in the eye and a number of serious eye diseases. These diseases include cataracts and disease of the skin around the eyes. Ultraviolet rays may also contribute to age-related mascular degeneration, the major cause of reduced vision in people over 55.

Q: Can sunglasses protect the eyes from ultraviolet rays?

A: Sunglasses (either prescription or non-prescription) that block 99 to 100 percent of the full ultraviolet spectrum (to 400 manometres) and include a trap around design offer the most protection. Sunglasse should reduce the visible spectrum of light to a level that eliminates glare and squinting. The degree of ultraviolet protection is not related to price. Ultraviolet absorption can be incorporated into nearly all optical materials in use, is inexpensive and does not interfere with vision.

Q: Is reading in dim light harmful to the eyes?

A: Dim light does not damage the eyes. However, good lighting does make reading easier and prevents eye fatigue, especially for those people who wear bifocal eyeglasses.

Q: Can sitting close to television damage a child's eyes?

A: Children focus up close without eye strain more easily than adults. There is no evidence that this damages the eyes and the habit of sitting close usually disappears as the child gets older. Children who are nearsighted sometimes sit close to the television screen in order to see more clearly. Parents suspecting this condition should have the child's eyesight checked.

## ஓஹிப் கார்ட் வழங்கலில் புதிய சில மாற்றங்கள்

ஒன்ராறியோவில் குடியிருப்பதாகத் தம்மை நிரூபிக்கும் புதிய அகதி நிலைக் கோரிக்கையாளர்களுடன், மனு நிராகரிக்கப்பட்டு அப்பீல் செய்த அகதிகளும் தங்களுக்கான ஓஹிப் கார்ட் வசதிகளை மறு அறிவித்தல் வரை அனுபவிப்பார்கள். ஒன்ராறியோ மாகாண அரசு எடுத்துள்ள புதிய முடிவு இந்தச் சலுகையை வழங்கியுள்ளது.

முன்னர் மாகாண அரசாங்கம் எடுத்த முடிவின் பிரகாரம், அகதி மனு நிராகரிக்கப்பட்ட பின்னர் அப்பீல் மற்றும் மனிதாபிமான கருணை மனு சமர்ப்பித்த அகதிக் கோரிக்கையாளர்கள் தங்களின் ஓஹிப் கார்ட் வசதிகளை இழந்திருந்தனர். ஆனால் மத்திய அரசாங்கம் மாகாண அரசாங்கத்துடன் இறுதி நேரத்தில் நடத்திய பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து இதில் மாற்றம் கொண்டுவரப்பட்டுள்ளது.

இவ்வாறு ஓஹிப் வசதி மறுக்கப்பட்டவர்கள் தங்களது பழைய அட்டையுடன் சுகதார அமைச்சு அலுவலகத்துக்கு நேரடியாகச் செல்ல வேண்டும். அதன் மூலம் புதிய அட்டைக்கு விண்ணப்பிக்க முடியும்.

ஆனால் Backlog என்று கூறப்படும் தேக்க நிலையிலுள்ள அகதிகளின் விடயத்தில் அரசாங்கம் இன்னமும் எந்த முடிவையும் எடுக்கவில்லை. தேக்க நிலையிலுள்ளவர்களின் கனடிய பிரஜையான பிள்ளைகளுக்கு ஓஹிப் காட் வழங்கக் கூடியவாறு மாற்றங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன.

## வெளிநாட்டு மாணவர்கள் சேர்க்கப்பட்டனர்

ஒன்ராறியோவில் தங்கியிருந்து கல்வி பயிலும் வெளிநாட்டு மாணவர்களுக்கும் ஓஹிப் வசதியை நீடிக்க இப்போது முடிவெடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி ஏற்கனவே ஓஹிப் கார்ட் வசதி முடிவடைந்த வெளிநாட்டு மாணவர்கள் புதிதாக தமது கார்ட்டுக்கு விண்ணப்பிக்க வேண்டும். இவர்களின் குடும்பத்தினருக்கும் ஓஹிப் வசதியுண்டு.

## லான்டட் பேப்பருடன் வருபவர்கள் மூன்று மாதங்கள் காத்திருக்க வேண்டும்

ஸ்பொன்ஸர் செய்யப்பட்டு லான்டட் அந்தஸ்துடன் ஒன்ராறியோவுக்குள் குடியேறுபவர்கள் தமது ஓஹிப் அட்டையைப் பெற மூன்று மாதங்கள் காத்திருக்க வேண்டும். புதிய சட்டத்தின் கீழ் ஒன்ராறியோவுக்குள் மூன்று மாதங்கள் குடியிருந்தது என்பதை நிரூபித்த பின்னரே ஒருவருக்கு ஓஹிப் அட்டை வழங்கப்படும்.

எனவே இங்கு வந்த தொண்ணூறு நாட்களின் பின்னர், ஒன்ராறியோவில் குடியிருந்தது என்ற சத்தியக் கடதாசி மற்றும் தேவையான தஸ்தாவேஜுகளை எடுத்துக் கொண்டு விண்ணப்பிப்பதற்கு நேரடியாகச் சென்றால், மேலும் தாமதமின்றி ஓஹிப் கார்ட்டைப் பெறமுடியும்.

# கனடா தமிழ் எழுத்தாளர் இணையம்; 'களை' பிடுங்கிய புதிய குழுவுடன் இரண்டாவது ஆண்டில் பிரவேசம்

ஓராண்டுக்கு முன்னர் பலமான வரவேற்புடனும், புதிய எழுச்சியுடனும் உதயமான கனடா தமிழ் எழுத்தாளர் இணையம் , அதன் தலைவருக்கும் செயலாளருக்குமிடையில் உருவான 'லடாய்' காரணமாகவும், செயலாளரின் தன்னிச்சையான நடவடிக்கைளினாலும் சற்றே பின்னோக்கிச் சென்று, தற்போது மீண்டும் துரித நடை போடக் கூடியதான புதிய குழுவிடம் (அதே, பழைய தலைவர்; ஆனால் புதிய செயலாளர்) சென்றடைந்துள்ளது.

இணையத்தின் 1994-95ம் ஆண்டுக்கான நிர்வாகிகளைத் தெரிவதற்கான இணையத்தின் பொதுக்குழுக் கூட்டம் ஜுலை மாதம் பத்தாம் திகதி ஸ்காபரோவிலுள்ள உணவகமொன்றில் நடைபெற்றது. இந்தக் கூட்டம் பொதுக்குழுவுடன் கலந்தாலோசிக்கப்படாது, செயலாளரால் தன்னெண்ணப்படி நடத்தப்பட்டது என்ற குற்றச்சாட்டு கூட்ட ஆரம்பத்திலேயே முன்வைக்கப்பட்டது. இதற்கான அறிவித்தல் கூட செயலாளரால் அவர் விரும்பிய பத்திரிகை ஒன்றுக்கு மட்டுமே கொடுக்கப்பட்டது என்றும் இங்கு தெரிவிக்கப்பட்டது.

எனினும் சங்கப் போஷகர்களில் ஒருவரான கவிஞர். கந்தவனம் அவர்கள் இணையத்தின் எதிர்காலம் கருதி பலரிடமும் தனிப்பட்ட முறையில் விடுத்த வேண்டுகோளைத் தொடர்ந்தே, தலைவரும் மற்றும் எழுத்தாளர்களுமாக சுமார் 40 பேர் இதில் கலந்து கொண்டனர். (இவர்களில் சந்தா செலுத்தி அன்றைய கூட்டத்தில் கலந்து கொள்ள எத்தனை பேர் தகுதி பெற்றவர்கள் என்பதை எவராலும் கண்டு பிடிக்க முடியவில்லை. இதற்குக் காரணம், இணையத்தின் பொருளாளரானவர் கூட்டம் அரைவாசி முடியும்வரை அந்தப் பக்கத்தில் காணப்படவில்லை.)

பொதுக்கூட்டத்துக்கான நிகழ்ச்சி நிரல்கூட தலைவருடன் கலந்தாலோசிக்கப்படாது செயலாளரினால் தயாரிக்கப்பட்டது என்ற விபரம் தெரிய வந்த பொழுது பலரும் மூக்கில் விரலை வைக்க நேர்ந்தது.

இணையத்தின் தலைவர் திரு. க.தெ.சன்முகராசா (வீணைமைந்தன்) தமது தலைமை உரையில் பின்வருமாறு குறிப்பிட்டார்: " தமிழ் எழுத்துகளைக் கூட்டி ஒரு நல்ல தமிழ்ச் சொல்லை அல்லது கவிதை வரிகளை ஆக்கி விடலாம். ஆனால் தமிழ் எழுத்தாளர்களை ஒன்றுகூட்டி மனித நேயத்துடன் ஒன்றுபடுத்தி விடமுடியுமா என்பது கேள்விக்குறியாகவே இருந்து வந்தது. இப்படியான சமயத்தில் எழுத்தாளர்களை இன உணர்வால், மொழி உணர்வால், நாட்டுப் பற்றால் இணைக்க முடியும் என்று உறுதியுடன் செயலாற்றினோம். இந்தச் செயல் திறனை மெச்சி 'அகிலன் அசோஷியேற்ஸ்' நிறுவனம் நன்கொடை வழங்கினார்களே! 'சேக்கம்' அமைப்பினர் கௌரவ விருது வழங்கிக் கௌரவித்தார்களே! இவர்களெல்லாம் பொதுமக்களின் எதிர்பார்ப்புகளைப் பிரதிபலித்த தமிழ் ஆர்வலர்கள் அல்லவா? இணையத்திடமிருந்து எதிர்பார்க்கப்பெற்ற செயல்வடிவங்கள் கடந்த பன்னிரண்டு மாதங்களாகச் செயலற்றிருக்கக் காரணமென்ன?" என்ற கேள்வியைத் தலைவர் எழுப்பினார்.

இவ்வாறு உறங்கு நிலையிலிருக்கும் இணையத்தை உயிர்த்துடிப்புள்ளதாக மாற்றி, மக்கள் மத்தியில் தொண்டு புரியவும் தமிழ்ப் படைப்புகளைக் கொண்டு வரவும், படைப்பாளிகளைப் பாராட்டிக் கௌரவிக்கவும் உறுதி தரக்கூடிய உத்தரவாதமுள்ள புதிய நிர்வாக சபையைத் தெரிவு செய்யும்படி தலைவர் தமது உரையின் இறுதியில் வேண்டுகோள் விடுத்தார்.

**ரோகிணி**

இதனையடுத்து கடந்த ஆண்டு செயலாளராகவிருந்த அளவெட்டி சிறீசுக்கந்தராசா பலரதும் கேள்விக் கணைகளுக்குள்ளாகிப் பல தடவைகள் தடுமாற நேர்ந்தது. பத்திரிகையொன்றில் அவரால் எழுதப்பட்ட கவிதையின் போட்டோப் பிரதிகள் சபையில் விநியோகிக்கப்பட்டு அது பற்றி விளக்கம் கேட்கப்பட்டபொழுது அதனைத் தட்டிக் கழிக்க அவர் முனைந்தாராயினும் சிலர் அதனை ஏற்காது மீண்டும் மீண்டும் பதில் கேட்டனர். இணையத்தின் தலைவரைப் பற்றியே இவ்வாறு எழுதும் ஒருவர் அதன் செயலாளராக இருக்கத் தகுதியுடையவரா என்றும் ஒரு குரல் கேட்டது.(புதிய செயற்குழு தெரிவின்போது இதற்கு விடை காணப்பட்டது).

பல தடவைகள் கவிஞர் கந்தவனமும், அதிபர் பொ. கனகசபாபதியும் கூட்டத்தில் அமைதியை நிலைநாட்ட அரும்பாடுபட்டதை அவதானிக்கக்கூடியதாகவிருந்தது. இந்தக் கூட்டத்தில் இடம்பெற்ற முக்கிய விடயங்களில் ஒன்று பொருளாளரின் கணக்குச் சமர்ப்பித்தல். கடந்த வருடம் பொருளாளராகவிருந்த திரு. சாமி அப்பாத்துரை அவர்கள், கூட்டத்துக்கு நேரம் பிந்தி வந்ததுடன், அது பற்றிய தத்துவமொன்றையும் தமதுரையில் எடுத்தியம்பினார். 'ஒருவன் கூட்டத்துக்குப் பிந்தி வருவானானால் அவன் புத்திசாலியாக இருப்பான். அல்லது முட்டாளாக இருப்பான். இதில் நான் எந்த வர்க்கம் என்பதை நீங்களே அறிவீர்கள்" என்று தமது கணக்குக் காட்டலை ஆரம்பித்த அவர், கடைசி வரை எந்தக் கணக்கையும் எழுதி வந்து வாசிக்காமலும், கணக்கறிக்கைப் பிரதிகளை அங்கத்தவர்களுக்கு விநியோகிக்காமலும், ஒருவாறு 'கணக்குக் காட்டிவிட்டு' தனது வேலையை முடித்துவிட்டு அமர்ந்தார். பொறுமையுடன் அனைத்தையும் பார்த்துக் (வேடிக்கையுடனும் வேதனையுடனும்) கொண்டிருந்த பொதுக்குழுவினர் அவரையும் புதிய செயற்குழுவில் இடம்பெறாது பார்த்து விட்டனர்.

புதுவருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவாகினர்:

போஷகர்கள்: கவிஞர். வி. கந்தவனம், திருமதி. வள்ளிநாயகி இராமலிங்கம் (குறமகள்), திரு. பொ. கனகசபாபதி.

தலைவர்: திரு. க. தெ. சண்முகராசா (மீண்டும் தெரிவு). உபதலைவர்: திரு. ஆர். என். லோகேந்திரலிங்கம் (மீண்டும் தெரிவு). செயலாளர்: திரு. சின்னையா சிவநேசன். உபசெயலாளர்: திரு. நடா ராஜ்குமார். பொருளாளர்: திரு. சிவா சின்னத்தம்பி. உபபொருளாளர்: தீவகம் வே. இராசலிங்கம். மக்கள் தொடர்பு அதிகாரி: திரு. செ. செந்தில்நாதன்.

நிர்வாக சபையினர்: திரு. எஸ். ஜெகதீசன், திரு. ராவுத்தர், திரு. ரவி அமிர்தவாசன், திரு. எஸ். சிறிஸ்கந்தராசா.








போஷகர்களில் ஒருவர் தவிர மிகுதி நிர்வாகக் குழுவில் பெண் எழுத்தாளர் ஒருவர்கூட இடம்பெறாத காரணம் என்னவோ?

## ஸ்காபரோவில் சாயி பஜனை

ஸ்காபரோ சாயி சமித்தியினரால் இரண்டு வாரத்துக்கு ஒரு தடவை ஸ்காபரோ வுபர்ன் கல்லூரி மண்டபத்தில் பிற்பகல் ஆறு மணி முதல் ஒன்பது மணி வரை சாயி பஜனை நடத்தப்பட்டு வருகின்றது. இந்த (ஆகஸ்ட்) மாதத்தில் 14ம் 28ம் திகதிகளில் பஜனை நடைபெறும்.

# சைவசித்தாந்த மகாநாட்டுப் பேராளர்கள் பாராட்டுபசார விழாப் படங்களின் தொகுப்பு



# சைவசித்தாந்த மாநாட்டுக்கு வருகை தந்திருந்த வெளிநாட்டு பேராளர்களுக்கு வழங்கப்பெற்ற பாராட்டுபசாரம்

கனடாவில் கடந்த மாதம் நடைபெற்ற அனைத்துலக நான்காவது சைவ சித்தாந்த ஆராய்ச்சி மகாநாட்டில் கலந்து கொண்ட பேராளர்களான அவுஸ்திரேலிய பேர்த் நகர இந்து ஆலய பிரதம அர்ச்சகர் சிவஸ்ரீ நா. சோமாஸ்கந்தக் குருக்கள் , திருவாசக மடம் சரவணமுத்து சுவாமிகள், 'ஆத்மஜோதி' நா. முத்தையா, புலவர் ஈழத்துச் சிவானந்தன், திருக்கேதீஸ்வரம் ஆலயசபைச் செயலாளர் சட்டத்தரணி எஸ். நமசிவாயம், தமிழகத்தைச் சேர்ந்த தொல்பொருள் ஆய்வாளர் கலாநிதி. நாகசாமி ஆகியோருக்கு கனடா-வாழ் தமிழ் மக்கள் இணைந்து நடத்திய பாராட்டுபசாரப் பெருவிழா கடந்த மாதம் 17ம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ரொறன்ரோ சென் கிளயர் அவினியுவிலுள்ள மரீனா வரவேற்புபசார மண்டபத்தில் நடைபெற்றது.

தமிழர் தகவல் பிரதம ஆசிரியர் திரு. எஸ். திருச்செல்வம் இந்த வைபவத்துக்குத் தலைமை தாங்கினார். திருமதி. பத்மா அருளையா மங்கல விளக்கேற்றி வைக்க, இரண்டு நிமிட மௌன அஞ்சலியை அடுத்து, சிவஸ்ரீ பஞ்சாட்சர கிருஷ்ணராஜக் குருக்கள் அனைவரையும் வரவேற்று உரையாற்றினார்.

திருவாளர்கள் ஆர் என். லோகேந்தரலிங்கம் (ஆசிரியர், சூரியன்), சாமி அப்பாத்துரை, இலங்கைச் சட்டத் தரணி எஸ். கே. மகேந்திரன், திருமதி. மங்கையர்க்கரசி பத்மநாதன், சிவஸ்ரீ பஞ்சாட்சர விஜயகுமாரக் குருக்கள் ஆகியோர் பாராட்டுரை வழங்கினர்.

பாதிக்கப்பட்ட நிலையில் அகதிகளாக இங்கு வரும் மக்களை மதம்மாற்ற எடுக்கப்படும் நடவடிக்கைகளைப் பலரும் தமதுரையில் சுட்டிக் காட்டினர். பல நெருக்கடிகளுக்கும் மத்தியில் மகாநாட்டைச் சிறப்பாக நடத்திய மகாநாட்டுக் குழுவினருக்குப் பலரும் தங்கள் பாராட்டுகளை வழங்கினர். அதேசமயம் மகாநாட்டுக்குப் போதியளவு பிரசாரம் செய்யப்படாததால் பொதுமக்கள் பங்களிப்பு குறைவாகவேயிருந்தது என்பதும் பேச்சுகளின்போது சுட்டிக்காட்டப்பட்டது. சைவ சமயமும், ஆலயப் பணிகளும் மக்கள் மயப்படுத்தப்பட வேண்டும் என்ற கருத்தும் முன்வைக்கப்பட்டது. (கடந்த மாத தமிழர் தகவல் ஆசிரிய தலையங்கமும் இதனையே வலியுறுத்தியிருந்தது).

இவ்வருடம் நடத்தப்பெற்ற சைவ சித்தாந்த மகநாட்டை அடியொற்றி, வருடாவருடம் சிறிய அளவிலாவது இங்கு சைவ மகாநாடு நடத்தப்பெற வேண்டும் என்ற கருத்தை விழாத் தலைவர் தமதுரையில் முன்வைத்தார். மகாநாட்டைச் சிறப்பாக நடத்தி முடித்த குழுவினரான திருவாளர்கள். நா. சிவலிங்கம், திருநடராசா, ஆர். வெங்கட்ராமன், கே. எச். சத்தி, என். ஆர்.சுப்பிரமணியம் ஆகியோரின் அரும் பணிகளைப் பாராட்டி மணிவிழாக் கவிஞர் வி. கந்தவனம் அவர்கள் உரையாற்றினார். மகாநாட்டுக் குழுவினர் ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக பாராட்டுப் பட்டயம் வழங்கிக் கௌரவம் செய்யப்பட்டது. குழுத் தலைவர் திரு. நா. சிவலிங்கம் அவர்களும், செயலாளர் திரு. ஆர் வெங்கட்ராமனும் குழுவினர் சார்பில் பதிலுரை வழங்கினர்.

**கட்டுரை:**
**எஸ். ரி. சிங்கம்**
**படங்கள்:**
**பி. அன்னதேவன்**

இதனையடுத்து மகாநாட்டுப் பேராளர்கள் ஒவ்வொருவருக்கும் தங்கப்பதக்கம் சூட்டப்பெற்று பாராட்டுப் பட்டயமும் வழங்கிக் கௌரவம் செய்யப்பட்டது. தலா ஒவ்வொரு தங்கப்பதக்கங்களை மஞ்சுளா பாஷன்ஸ் நிறுவனம், 'தமிழர் மத்தியில்' வெளியீட்டாளர்கள், திரு. கே. பரமேஸ்வரன், ஸ்ரீசிவா நகைமாளிகை, 'தமிழர் தகவல்' சார்பில் அகிலன் அசோஷியேற்ஸ் நிறுவனம் ஆகியவை அன்பளிப்புச் செய்திருந்தன. அனைவருக்கும் வழங்கப்பெற்ற பாராட்டுப் பட்டயங்களை ஸ்ரீநிவாஸ் நிலையத்தின் சார்பில் அதன் உரிமையாளரான கனடிய திருமணப் பதிவு அதிகாரி சிவஸ்ரீ ஸ்ரீநிவாச சர்வானந்தக் குருக்கள அன்பளிப்புச் செய்திருந்தார்.

தங்களுக்கு வழங்கப்பட்ட பாராட்டினை ஏற்றுக்கொண்ட பேராளர்கள் பதிலுரை வழங்கினர். சைவ சித்தாந்த மகாநாட்டைச் சிறப்பாகவும், வெற்றியாகவும் நடத்தியமைக்காக அனைவருக்கும் தமது மனம் நிறைந்த பாராட்டை வழங்கினார் சரவணமுத்து சுவாமிகள். றிச்மண்ட்ஹில் இந்து ஆலயத்துக்கு ஓதுவார் ஒருவரின் நிரந்தர சேவை பெறப்படவேண்டும் என்று வலியுறுத்தினார் சட்டத்தரணி நமசிவாயம் அவர்கள்.

உலகம் முழுவதும் சைவமும் தமிழும் தழைத்தோங்கும் சுபமுகூர்த்தம் கைகூடியுள்ளது. இனி நாம் ஒன்றும் அஞ்ச வேண்டியதில்லை என்று உற்சாகம் வழங்கினார் சிவஸ்ரீ சோமாஸ்கந்தக் குருக்கள். மதமாற்றம் என்பது வெறும் மனமாற்றமே என்றும், உண்மையான மதமாற்றம் என்று ஒன்றில்லை என்றும், சகல மதங்களையும் இணைக்கும் நிலை ஏற்படுத்தப்படவேண்டும் என்றும் கூறினார் புலவர் ஈழத்துச் சிவானந்தன்.

கவிஞர் சிவா சின்னத்தம்பி அவர்கள் சைவ சமயத்தின் தத்துவத்தை விளக்கி நன்றியுரை ஆற்றினார்.



# LOW COST
# CARPET & INTERIOR'S
# WAREHOUSE

- ★ CARPET
- ★ CERAMIC TILES
- ★ HARD WOOD FLOOR
- ★ KITCHEN CABINETS
- ★ THERMAL WINDOWS
- ★ DOORS
- ★ PORTABLE & CENTRAL VACCUM
- ★ DRAPERIES
- ★ VERTICAL BLINDS
- ★ VENETIAN BLINDS
- ★ ITALIAN LEATHER SOFA
- ★ LIVING ROOM SET
- ★ BED ROOM SET
- ★ MATTRESS, FRIDGE, STOVE, WASHER, DRYER, FREEZER AND MUCH MORE...

PARA - PAINTS


**CALL US FOR COMPLETE HOME RENOVATION**
**SHOW ROOM OPEN ONLY BY APPOINTMENT**

**721 PROGRESS AVE, UNIT. A, SCARBOROUGH, ONT.**

உரிமையாளர்: சபேசன் காங்கேசு

***TEL: (416) 605-1990***

# றிச்மன்ட்ஹில் ஆலய முருகன் தேரேறி வீதி உலா வருதலும் பக்தர் காவடி நேர்த்திகடனும்



கனடா றிச்மன்ட்ஹில் இந்து ஆலயத்தில் வருடாந்தம் மூன்று கொடியேற்ற உற்சவங்கள் நடைபெற்று வருகின்றன. ஜூன் மாதத்தில் பிள்ளையாருக்குக் கொடியேற்றம் நடைபெற்று பதினைந்து நாட்கள் உற்சவம் நடைபெறும். ஜூலை மாதத்தில் முருகனுக்குக் கொடியேற்றம் நடைபெற்று பத்துத் தினங்கள் உற்சவம் நடைபெறும். ஆகஸ்ட் மாதத்தில் பெருமாளுக்குக் கொடியேற்றம் நடைபெற்று பத்து நாட்கள் உற்சவம் நடைபெறும். கடந்த மாதம் முருகன் உற்சவத் தேர்த் திருவிழாவின்போது பெண் அடியார்கள் வடம் பிடித்து ரதம் இழுத்து வருவதையும், பக்தர் ஒருவர் காவடி எடுத்துத் தமது நேர்த்திக் கடனை நிறைவேற்றுவதையும் இங்குள்ள படங்களில் காணலாம். (படப்பிடிப்பு: பி. அன்னசேகரன்).



## றிச்மன்ட்ஹில் இந்து ஆலய இந்தமாத உற்சவங்கள்

றிச்மன்ட்ஹில் இந்து ஆலய இந்த மாத முக்கிய உற்சவங்களின் விபரங்கள் வருமாறு:

01 திங்கள்: கிருத்திகை, ஷண்முக அர்ச்சனை
02 செவ்வாய்: ஆடிச் செவ்வாய்
03 புதன்: ஆடிப்பெருக்கு
04 வியாழன்: பிரதோஷம்
07 ஞாயிறு: ஆடி அமாவாசை
09 செவ்வாய்: ஆடிச் செவ்வாய்
10 புதன்: நாக சதுர்த்தி, சதுர்த்தி விரதம்
12 வெள்ளி: சஷ்டி விரதம்
13 சனி: சுந்தரமூர்த்தி சுவாமிகள் குருபூஜை
16 செவ்வாய்: ஆடிச் செவ்வாய்
18 வியாழன்: பிரதோஷம்
19 வெள்ளி: நடராஜர் உற்சவம்
20 சனி: பௌர்ணமி
21 ஞாயிறு: ஆவணி ஞாயிறு
22 திங்கள்: பெருமாள் திருவிழா ஆரம்பம், கொடியேற்றம்.
29 திங்கள்: பெருமாள் தேர்
30 செவ்வாய்: பெருமாள் திருவிழா தீர்த்தம்
31 புதன்: பெருமாள் பூங்காவனம்

## வெல்ஃபெயர் மோசடி

(4ம் பக்கத் தொடர்ச்சி)
எனவும் தெரிவிக்கப்பட்டது.

தற்போது வெல்ஃபெயரில் இருப்பவர்களில் சுமார் 35 விதமானவர்கள் மோசடிப் பேர்வழிகள் என்று மெற்றோ நகர அலுவலக அதிகாரிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர். இவர்களைக் கண்டுபிடிக்கவென ஒவ்வொரு வெல்ஃபெயர் அலுவலகத்துக்கும் மூன்று விசேஷ அதிகாரிகள் கொண்ட குழு நியமிக்கப்பட்டுள்ளது. இவர்கள் வெல்ஃபெயர் பொலிஸ் என அழைக்கப்படுகின்றனர்.

இந்த வருட இறுதிக்குள் ஆகக் குறைந்தது பத்து வீத ஊழலையாவது கண்டு பிடிகக வேண்டும் என்பதே இவர்களின் இலக்காகும். இதன் மூலம் இருபது மில்லியன் டாலர்களை மீதப்படுத்தலாம் என மாகாண அரசாங்கம் கருதுகின்றது.

# கவிதாஸ் KAVITHAS INC.

உலகனைத்துக்குமான துரித பணமாற்றுச் சேவை
(இலங்கை, தென்னிந்தியா உட்பட சகல பகுதிகளுக்கும் விசேட சேவை)
மற்றும் பாக்ஸ், பார்ஸல் சேவை

**WORLDWIDE MONEY TRANSFER FAX & COURIER SERVICE**

தாயகத்திலும் வெளிநாடுகளிலும் வாழும் நண்பர்கள் உறவினர்களுக்கு ஒரு சில நேரத்தில் பணம் சென்றடைய உத்தரவாதமும், நம்பிக்கையுமுள்ள ஸ்தாபனம். மொன்றியல், மிஸிஸாகா, வன்கூவர், அல்பேர்ட்டா நகரங்களில் வசிப்பவர்களுக்கும் பணம் அனுப்ப வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

பிரசித்திபெற்ற இந்திய சுமீத் மிக்ஸியை நேரடியாக எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.



கவிதாஸ்
1241 Ellesmere Road,
Scarborough, Ont. M1P 2X8
Tel: (416) 755-6560 (416) 750-1983

இலங்கைத் தமிழ் மக்களின்
குடிவரவு, அகதிநிலைக் கோரிக்கை விசாரணைகளுக்கு

அனுபவமும் ஆற்றலும்மிக்க வழக்கறிஞர்
MARK FROMKIN, LL. B.
Barrister & Solicitor

நீங்கள் கனடா வந்ததும் அகதிநிலை கோருவதற்கான விண்ணப்பப் பத்திரம் கிடைத்ததும் தாமதமின்றித் தொடர்பு கொள்ளுங்கள்.
நீங்கள் எதுவித பணமும் செலுத்தத் தேவையில்லை.
அனுபவமுள்ள தமிழ் மொழிபெயர்ப்பாளர்கள் சேவை கிடைக்கும்.
புதிய திட்டத்தின்கீழ் மனிதாபிமான மேன்முறையீடு,
மீளாய்வு ஆகியவைகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

**சட்ட உதவிப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்**

# MARK FROMKIN, LL.B.

Barrister & Solicitor
5160 Yonge St., Suite: 700, North York, Ontario. M2N 6L9
**PHONE: (416) 250 - 0818**

# மு. காசிப்பிள்ளை

## சக புத்திரர்கள்

கனடிய அரசாங்கத்தின் அங்கீகாரம் பெற்ற
துரித பணமாற்றுச்சேவை நிறுவனம்

37 வருட வர்த்தக அனுபவம்

1958ல் இருந்து வர்த்தகத்துறையில் முன்னோடிகளாகத் திகழும் எமது ஸ்தாபனத்துடன் உங்கள் பணமாற்றுச் சேவையை வைத்துக் கொள்ளுங்கள்! பலன் பெறுங்கள்!!
எமது சேவையில் இதுவரை பூரண திருப்தி கண்டு எம் தமிழ் மக்கள் மகிழ்ச்சி கொண்டுள்ளார்கள். இது எமக்கு மிகுந்த பெருமிதத்தைத் தருகிறது.

* வவுனியா * மட்டக்களப்பு * சிலாபம் * நீர்கொழும்பு * கொழும்பு (சுற்றுப்புறங்கள்) * சென்னை * சிங்கப்பூர்

ஆகிய இடங்களுக்கு துரித பணமாற்றுச் சேவை

**கல்லெல்லாம் மாணிக்கக் கல்லாகுமா**

# M. KASIPPILLAI AND SONS INC

**3228 Eglinton Ave. East, #3, Scarborough, Ont. M1J 2H6**
**Tel: (416) 267-8221**



☆ உங்களுக்குத் தேவையான அன்பளிப்புப் பொருட்கள்
☆ தரமான தமிழ், சிங்கள வீடியோ திரைப்படங்கள்
☆ ஓடியோ ☆ CDக்கள்,

**Tel:**
**(416) 285-7924**
**Fax:**
**(416) 285-9724**

# *Rojah*
*Video & Gift Shop*

**1151A**
**Victoria Park**
**Unit #1**
**East York**
**Ontario**

☆ வீடியோ பிரதி மாற்றம் PAL ⟷ NTSC $5.99
☆ Fax Service ☆ Textile
☆ Electrical & Electronic Items

# யசோ சின்னத்துரை

கனடிய பாரிஸ்டர், சொலிஸிற்றர் & நொத்தாரிசு

* குடிவரவு அகதி விசாரணை (புதிய மனிதாபிமான மேன்முறையீடு பிரதிநிதித்துவம், மீளாய்வு ஆகியன உட்பட).
* வீடு, வர்த்தக ஸ்தாபனங்கள் கொள்முதல், விற்பனை, ஈடுவைப்பு/மீட்டல்.
* குடும்ப விவகாரச் சட்ட உதவி, பிரதிநிதித்துவம்.
* அதிகாரக் கையளிப்பு (Power of Attorney)
  இறுதி விருப்ப ஆவணம் (Last Will)
* இலங்கையில் நடைபெறவேண்டிய சட்டத் தேவைகளுக்கு ஆலோசனை.
  பிரதிநிதித்துவ பொதுத் தொடர்பு.
  இத்தகைய பிரதிநிதித்துவமும், மற்றும் பொதுத் தேவைகளுக்கான சட்ட ஆலோசனைகளும் வழங்கப்படும்.
  சட்ட உதவிப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

# Yaso Sinnadurai

Barrister & Solicitor, Notary Public (Ontario)

* Immigration & Refugee Law (Including Federal court Appeals, Inquiries, Detention Reviews, Humanitarian and Compassionate submissions under the **new regulations** to be implemented for rejected refugee claimants.)
* Purchase and sale of Residential and Commercial Properties, Registration of Mortgages.
* Family Law (Limited to uncontested divorce and separation agreements.)
* Last will/ Power of Attorney.
* Consultation on legal issues arising from transactions in SriLanka.

2 Carlton Street, Suite 1704, Toronto, Ontario M5B 1J3
(College Subway)

**Telephone:(416) 977-1071   Fax: (416) 977-9794**



## COLOUR AND BLACK & WHITE

Professional Photography

**P. Anna Devan**

Qualified Photographer in Canada.

Weddings, Birthdays, Family Portraits, Copy Works etc.

Call for your needs & advice:

**Tel: (416) 921 - 9743**

"Quality & Service is a pleasure"

# கனடா தமிழ் எழுத்தாளர் இணையம் நடத்தும் கவியரங்கம்

கனடா தமிழ் எழுத்தாளர் இணையம் புதிய நிர்வாகத்தின் கீழ் இரண்டாவது நிகழ்ச்சியாக நடத்தும் திறந்த வெளிக் கவியரங்கம் இம்மாதம் பதினான்காம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 11.00 மணிக்கு ஸ்காபரோ மோனிங்சைட்டில் நடைபெறவுள்ளது. மேற்கில் கலாசாரம் நிலைக்குமா என்ற தலைப்பில் நடைபெறும் இக் கவியரங்குக்கு கவிஞர். வே. இராசலிங்கம் தலைமை தாங்குவார்.

இங்கிலாந்து ஈழகேசரி பத்திரிகையின் ஆசிரியர் ராஜகோபால் இந்த நிகழ்ச்சியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். கலந்துரையாடலும் இடம்பெறும்.

# தமிழ் கிறிஸ்தவ திருச்சபையின் இந்தமாத நிகழ்ச்சிகள்

கனடா தமிழ் கிறிஸ்தவ திருச்சபையின் நிகழ்ச்சிகள் 1300 Bridle Town Park Church இல் நடைபெறுகின்றன.

ஒவ்வொரு ஞாயிறும் பிற்பகல் 4:00 மணிக்கு ஆராதனை நடைபெறும்.

மாதத்தின் முதலாவது மூன்றாவது வெள்ளிக்கிழமைகளில் மாலை 7:00 மணிக்கு பாடல் பயிற்சி நடைபெறும். மாதத்தின் இரண்டாவது வெள்ளிக்கிழமை மாலை 7.30 மணிக்கு பெண்கள் சங்கக் கூட்டம் நடைபெறும்.

வாலிபர் ஐக்கிய கூட்டங்கள் மாதத்தின் முதலாவது, மூன்றாவது சனிக்கிழமைகளில் மாலை 6:00 மணிக்கு நடைபெறும்.

உளவியல் ரீதியான தேவைகளுக்கு போதகர். நேச லைசான்டர் அவர்களுடன் 493-2824 என்ற தொலைபேசி இலக்கத்தில் தொடர்பு கொள்ளவும்.

# தமிழ் எழுத்தாளர் விபரக்கொத்து

கனடா தமிழ் எழுத்தாளர் இணையம் தனது முக்கிய இலக்கியப் பணியாக இங்கு வாழும் எழுத்தாளர்கள், இலக்கியகாரர்களின் விபரப் பட்டியலொன்றைத் தயாரித்து நூலுருவில் கொண்டுவரும் பணியில் ஈடுபட்டுள்ளது. இந்த வெளியீட்டுப் பணியின் பொறுப்பாளராக கவிஞர் வி. கந்தவனம் செயற்படுகின்றார்.

விண்ணப்பப் பத்திரங்கள் தேவைப்படுவோர் கவிஞர் கந்தவனம் அவர்களுடன் 425-5813 என்ற தொலைபேசியில் தொடர்பு கொள்ளலாம்.

# பிள்ளைப் பேற்றினை தொடர்ந்து

(7ம் பக்கத் தொடர்ச்சி)

இமிகிரன்ட் பெண்கள் நிலையம், 489 College St (416) 323-9986

சென். ஜோசப் பெண்கள் நிலையம், 30 Queensway. (416) 530-6850

அக்சஸ் அலையன்ஸ், 509 College St. (416) 324-8677

சென் ஜேம்ஸ் ரவுண் உடல்நல நிலையம் 200 Wellesley St Esast. (416) 926-7056

பெண்கள் நலன் பெண்கள் கையில், 344 Dupont St. (416) 515-9861

யோர்க் சமூக சேவைகள், 1651 Keele St. (416) 653-5400

பிளெமிங்டன் உடல்நல நிலையம், 10 Gateway Blvd. (416) 429-4991

பாக்டேல் சமூக உடல்நல நிலையம், 1257 Queen St West, (416) 537-2455

கிழக்குப் பிரிவு சுகாதார சேவைகள், 343 Coxwell Avenue. (416) 778-5858

தென் ரிவடேல் சமூக உடல்நல சேவை, 126 Pape Avenue. (416) 461-2493

# சைவ சித்தாந்த மகாநாடு

(5ம் பக்கத் தொடர்ச்சி)


வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு இறுதி நாள் விழாவின்போது பரிசுகள் வழங்கப்பட்டன.

ரொறன்ரோவில் நடைபெற்ற மகாநாட்டையடுத்து ஜுலை 7ம் 8ம் திகதிகளில் ஒட்டாவாவிலும், 9ம் 10ம் திகதிகளில் மொன்றியலிலும் விழாக்கள் நடைபெற்றன.

முதலாவது சைவ சித்தாந்த ஆராய்ச்சி மகாநாடு தருமபுர ஆதீனத்தில் ஒழுங்கு செய்யப்பட்டு தமிழகத்தில் நடத்தப்பெற்றது. இரண்டாண்டுகளுக்கு ஒரு தடவை நடத்தப்பெறும் இத் தொடரின் இரண்டாம் மகாநாடு மலேஷியாவிலும், மூன்றாவது மகாநாடு இந்தியாவில் காசிக்கு அருகிலுள்ள பெனாறிஸிலும் நடைபெற்றது. மேற்குலக நாடொன்றில் இவ்வாறான மகாநாடு நடைபெற்றது இதுவே முதற்தடவையாகும். இந்தவகையில் கனடாவின் பெயர் சைவ மகாஉலகில் பொன்னெழுத்துகளால் நிச்சயம் பொறிக்கப்படும். கனடாவில் வாழும் சைவப் பெருமக்களும், மகநாட்டுக் குழுவினரும் இதனையிட்டுப் பெருமை கொள்ள இடமுண்டு.

## தமிழர் தகவலை தபால் மூலம் பெறுவதற்கு

- தமிழர் தகவல் விற்பனை செய்யப்படுவதில்லை.
- ஆனால் தபால் மூலம் பெற விரும்புபவர்கள், அதற்கான தபாற் செலவை தாங்களே பொறுப் பேற்க வேண்டும்.
- பெப்ரவரி மாதத்தில் வெளிவரும் ஆண்டு மலர் உட்பட ஒரு வருடத்தின் பன்னிரண்டு இதழ்களை தபாலில் பெற பதினைந்து டாலர்களைச் செலுத்த வேண்டும்.
- காசோலை, காசுக் கட்டளை ஆகியவைகளை Tamils' Information என்ற பெயருக்கு எழுத வேண்டும். உங்கள் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் ஆகியவைகளையும் எழுதி அனுப்பவும். அனுப்ப வேண்டிய முகவரி தமிழர் தகவலின் இரண்டாம் பக்கம் பார்க்க.




# *Learn how to drive in comfort!*

## If you want to learn driving skills perfectly:



with
under


in
on




Guaranteed lowest price in the city,
A fully *licensed and thoroughly honest instructor,*
*A very relaxing atmosphere,*
Absolute flexible hours,
Don't get freaked out of signs and rules,Take this opportunity and call
***Enayet Sharif*** **at:**



**(416)287-8552** PAGER # **501-7725**

# வெல்.்.பெயரில் இருப்பவர்களுக்கு வேலைப் பயிற்சி வழங்க மத்திய-மாகாண அரசுகள் ஒப்பந்தம்

ஒன்ராறியோ மாகாணத்தில் வெல்.்.பெயரில் தங்கியிருப்பவர்களுக்கு வேலைப் பயிற்சி வழங்கி அவர்களை வேலைக்குச் செல்லத் தூண்டுவதற்கான புதிய திட்டமொன்றை ஒன்ராறியா மாகாண அரசாங்கமும், மத்திய அரசாங்கமும் கூட்டாக மேற்கொள்ளவுள்ளன. இதற்கான ஒப்பந்தத்தில் மத்திய அரசின் மனிதவள அமைச்சர் திரு. லொய்ட் அக்ஸ்வேர்தியும், மாகாண சமூக சேவைகள் அமைச்சர் திரு. ரொனி ஸிலிப்போவும் கடந்த மாதம் கைச்சாத்திட்டனர்.

'ஜொப் லிங்க் ஒன்டாரியோ' என்ற பெயரில் இந்தத் திட்டம் அமல் செய்யப்படவுள்ளது. இதற்கென மத்திய அரசாங்கம் 25 மில்லியன் டாலர்களை வழங்கும். மாகாண அரசாங்கமும் இதேயளவு தொகையை ஒதுக்கியுள்ளது. 1995 மார்ச் 31ம் திகதி வரையான காலப்பகுதியில் செயற்படுத்தக் கூடியதாக இந்தப் பணம் செலவு செய்யப்படும். குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் ஆகக் குறைந்தது 50,000 பேருக்கு வேலைப் பயிற்சி வழங்க முடியுமென்றும், இதன் மூலம் இவர்கள் வேலைபெறுவதால் அவர்கள் வெல்.்.பெயர் பெறுவதிலிருந்து நீங்குவர் என்றும் மாகாண அரசாங்கம் எதிர்பார்க்கின்றது.

இந்தத் திட்டம் வெற்றியளிக்கும் பட்சத்தில் தொடர்ச்சியாக இதனை அடுத்த மூன்றாண்டுகளுக்கு அமல் செய்யவும் மாகாண அரசு ஆலோசித்துள்ளது. இந்தத் திட்டத்தின் பங்காளராக மத்திய அரசாங்கம் இணைந்துள்ளது புதுத் தெம்பினை ஊட்டுவதாக அமைச்சர் திரு. ரொனி ஸிலிப்போ அறிவித்துள்ளார்.

இரண்டாண்டுகளுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட 'ஜொப்ஸ் ஒன்டாரியோ' திட்டம் அளித்த வெற்றியே புதிய 'ஜொப் லிங்க் ஒன்டாரியோ' திட்டம் ஆரம்பிக்கப்படுவதற்குக் காரணம் என்றும் அமைச்சர் மேலும் சொன்னார்.

## பட்டதாரிகள் சங்கத்தின் கேள்வித் திரட்டு

கனடா, இலங்கை பட்டதாரிகள் சங்கம் 'Information Sheet' என்ற பெயரில் கேள்வித் திரட்டு ஒன்றினைத் தயாரித்து இங்குள்ள வர்த்தக நிலையங்களில் வைத்துள்ளது. இது தொடர்பாக மேற்படி சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: "இந்தக் கேள்வித் திரட்டினை எந்தத் துறையில் உள்ளவர்களும் நிரப்பி அனுப்பலாம். எங்களுக்குக் கிடைக்கும் தகவல்களை வைத்து எங்கள் தேவைகளை மாகாண அரசாங்க, மத்திய அரசாங்க மட்டங்களில் அறியத் தருவதுடன் நம்மவர்க்கு வேலை வாய்ப்பை அதிகரிக்கும் ஆலோசனைகளையும், திட்டங்களையும் வழங்கவுள்ளோம்".

எம்மவர்களில் பல துறைகளில் உள்ளவர்களுக்கும் இலவசமாகத் தொழிற் பயிற்சி பெற்றுக் கொடுக்கவும் ஒழுங்குகள் செய்து வருகின்றோம். விரும்புபவர்கள் தங்களது கல்வித் தகைமை, வேலை அனுபவம் ஆகியவைகளை சங்கத்துக்கு அனுப்பி வைக்கலாம். அனுப்ப வேண்டிய முகவரி: Association of SriLankan Graduates of Canada, P.O.Box: 44508, 2376 Eglinton Avenue East, Scarborough, Ontario. M1K


உங்கள் வசதி கருதி தற்போது இரண்டு இடங்களில் சேவை

இலங்கையிலும் வெளிநாடுகளிலும் கனடாவிலும்
மொத்தம் இருபது ஆண்டுகளுக்கு மேல்
பல் வைத்திய சிகிச்சையில் அனுபவம் பெற்ற
உங்கள் நம்பிக்கைக்குரிய

டாக்டர் அ. சண்முகவடிவேல்

குடும்ப பல் வைத்தியர்

செவ்வாய், வியாழன், வெள்ளி, சனி, ஞாயிற்றுக்கிழமைகளில்
2466 Eglinton Avenue East, Unit: 7, Scarborough, Ont. M1K 5J8
Opposite Kennedy Subway ( Rainbow Village கட்டடத்தில் )
(416) 266-5161

திங்கள், புதன் கிழமைகளில்
Main Square Dental Centre 2575 Danforth Avenue, Toronto, Ontario. M4C 1L5
(416) 690-0176

For all Your Immigration Problems Contact:

**BELVA SPIEL** B. Mus., LL.B
Barrister & Solicitor

**Immigration Law:**
* Refugee Claims
(Legal Aid Certificates Accepted)
* Sponsorship Appeals
* Independent Immigrants
* Humanitarian Applications
* Business Immigration
* Live-in Caregiver Programme
(Domestic Workers)

**குடிவரவுச் சட்டம்:**
* அகதிநிலைக் கோரிக்கை
(லீகல் எய்ட் சேர்ட்டிபிக்கட் ஏற்கப்படும்)
* ஸ்பொன்ஸர்ஷிப் அப்பீல்கள்
* சுதந்திரமான குடிவரவாளர் விவகாரம்
* மனிதாபிமான அடிப்படை விண்ணப்பங்கள்
* வர்த்தக குடிவரவாளர் விண்ணப்பம்
* வீட்டுப் பணியாளர் விவகாரம்

***Uncontested Divorces * Business Law**

Tamil & Sinhala Interpreters Available on Request
தமிழ், சிங்கள மொழிபெயர்ப்பாளர் வசதியுண்டு.

180 Bloor St. West, Suite 1202, Toronto, Ontario. M5S 2V6

**தொலைபேசி: 416- 972-9917 ∴பாக்ஸ்: 416- 967-5468**

**சிவாஸ் ரேடிங் கோ லிமிட்டட்**

**தமிழர்கள் மனதில் வைத்திருக்க வேண்டிய பெயர்**
**தமிழர்கள் நினைவில் நிலைத்திருக்க வேண்டிய பெயர்**

மரக்கறி வகைகள், கடல் உணவுகள்,
கோழி இறைச்சி, ஆட்டிறைச்சி மற்றும்
இலங்கை, இந்திய, கனடிய உணவுப்பொருட்களையும்,
தோசை, இடியப்பம் ஆகியவைகளையும் நியாயமான
விலையில் விற்பனை செய்பவர்கள்.

திருமணங்களுக்குத் தேவையான கூறை,
பட்டு வேட்டி, சால்வை, தலைப்பாகை, குத்துவிளக்கு,
பூமாலைகள், மணவறை, மண்டப வசதி, விருந்துபசார
உணவு வகைகள் ஆகிய அனைத்துக்கும்
எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

**SIVA'S TRADING CO. LTD**
**3852 Finch Ave.East, (Kennedy / Finch) Scarborough.**
**Tel: 321-2739**

# பிள்ளையின் கல்வி மேம்பாடு ஓர் கூட்டு முயற்சியாகும்

(12ம் பக்கத் தொடர்ச்சி)

பாவிக்க முனைவார்.

இலக்கணம்
எழுத்து வீச்சின் திசையை தெரிந்திருத்தல், கதைகள் சிறுபாடல்களை மாதிரியாகக் கொண்டு புதிய வசனங்களை ஆக்குதல்.

கணிதம்
ஒற்றை, இரட்டையாக வாய்மூலம் 100 வரை எண்ணுதல், உருவங்களை நிறம், அமைப்பு, பருமனை வைத்து பாகுபடுத்துதல்.

1ஆம் தரம் முதல் 3ஆம் தரம்
(வயது 6-8 வரை)

வாசிப்பு
சுயமாக வாசிக்க முடியும். கதைகளையும் ஏனையவற்றையும் வாசிப்பதில் ஈடுபாடு காட்டுதல். பாடங்களையும், மூலத்தையும் வைத்து புதிய சொற்களையும், கதைக-ளையும் விளங்கிக் கொள்ள முனைதல். புதிய பல யுக்திகளைக் கையாண்டு பரிச்சயமில்லாத சொற்களை வாசிக்க முனைதல்.

எழுத்து
சொந்த அனுபவங்களை எழுதுதல். படங்கள் மூலம் விளக்க முனைதல். சிறுகதைகள், குறிப்புக்கள் எழுதுதல்.

எழுத்துக்கூட்டல்
பாவனையிலுள்ள சொற்களைப் பிழையின்றி எழுதுதல். மின் கணனி, அகராதி உதவி கொண்டு தனது எழுத்துக் கூட்டலைச் சரிபார்த்தல்.

இலக்கணம்
பெயர்ச்சொல், வினைச்சொல் போன்றவற்றை சரியாக உபயோகித்தல். அடைமொழிகள், குறியீடுகளை உபயோகிக்க ஆரம்பித்தல்.

கணிதம்
இருநிலை எண்களைக் கொண்ட கூட்டல், கழித்தல் செய்தல். 5ஆம் வாய்ப்பாட்டில் 10 வரை பெருக்கல், பிரித்தல். ஐங்கோணி, அறுகோணி, எண்கோணியன் பக்கங்ளை இனங்கண்டு பெயரிடல்.

தரம்-4-6(வயது 9-11)

வாசிப்பு
குறிப்பிட்ட சில எழுத்தாளரினதும், சிலகுறிப்பிட்ட ஆக்கங்களையும் வாசிப்பதில் அக்கறை காட்டல். எழுத்தாக்கங்களின் நிறைகுறைகளை விமர்சித்தல்.

எழுத்து
கதை, கவிதை, அறிக்கை என பல்வேறு வியாபகங்களிலே எழுத்தினைப் பிரயோகித்தல், திட்டமிட்டு அதன்படிக்கு எழுதுதல், தன் எழுத்தினை மீளப்பார்த்து பிழைதிருத்தல்.

எழுத்துக்கூட்டல்
சாதாரண உபயோகத்தில் உள்ள எல்லாச் சொற்களையும் பிழையின்றி எழுதுதல். உபயோகத்தில் இல்லாத ஏனைய சொற்களையும் ஓரளவு சரியாக எழுதுதல்.

இலக்கணம்
பந்தி பிரித்து எழுதுதல். காற்புள்ளி, மேற்கோள், குறி போன்றவற்றைச் சரியாக உபயோகித்தல். பெயர்ச் சொல், வினைச்சொல், அடைமொழிகள் பற்றிய அறிவு, அகராதி உபயோகித்துத் தன் எழுத்தில் உள்ள பிழைகளை திருத்திக் கொள்ளல்.

கணிதம்
நிறைஎண், தசமஎண் போன்றவற்றின் கூட்டல், கழித்தல் பெருக்கல், பிரித்தல் பிரமிட், பல்கோணி, முக்கூம்பு போன்ற தள, திண்ம அமைப்புக்களைப் பாகுபடுத்தல். நீளம், பரப்பளவு, கொள்ளளவு, கனஅளவு, திணிவு போன்றவற்றை மதிப்பிடுதல்.

தரம்- 7-9(வயது 12-15)

வாசிப்பு
எல்லா வகை விஷயங்களையும் நாளாந்தம் வாசித்து விமர்சனம் செய்தல். தனது கருத்தினை எடுத்துக்கூறி அதை நிலைநிறுத்தச் சான்றுகள் தருதல். தனது ஆராய்ச்சிக்குத் தேவையான தகவல்களை பல மூலவளங்களிலிருந்து சேகரித்தல்.

எழுத்து
தனது, உணர்வு, எண்ணங்கள், அனுபவங்களை வலியுறுத்தி எழுதுதல். பல மூலவளங்களிலிருந்து தேடித்துருவி தகவல்களைப் பெற்று ஒரு அறிக்கையையோ, ஆய்வுரையையோ தயாரித்தல். தனது எழுத்தினை மீளப்பார்த்து தரம் உயர்த்தல். மின் கணனியை உபயோகித்துத் தேவையான தகவல்களைப் பெறுதல்.

எழுத்துக்கூட்டல்
தான் உபயோகிக்க விரும்பும் எந்தச் சொல்லையும் சரியாக எழுத்துக்கூட்டுவதுடன் பல்வேறு பாடங்களில் வரும் சொற்களையும் பிழையின்றி எழுதுதல்.

இலக்கணம்
பிரதிப் பெயர்ச் சொற்றொடர், இடைச்சொல், வாக்கியப் பிரிவு, காலம் போன்றவை பற்றிய பூரண அறிவு.

கணிதம்
நேர்கோட்டுச் சமன்பாடுகளை சம்பிரதாயமான முறைகளாலோ, வேறு முறைகளாலோ செய்து முடித்தல். நிபந்தனைகளின் அடிப்படையிலே முக்கோணி, நாற்கோணிகளில் ஒற்றுமை காணல். கனஅளவு, கொள்வளவு, பரப்பளவு போன்ற அளவீடுகளைக் கொண்டு செய்முறைப் பிரச்சனைகளுக்குத் தீர்வு காணல். பெற்றோர்களுக்கு ஒரு எச்சரிக்கையுடன் தொடங்குகின்ற இப் பிரசுரம் ஒரு அறிவுரையுடன் நிறைவுறுகிறது.

பெற்றோர்களின் ஈடுபாடும், காட்டும் அக்கறையுமே பிள்ளைகளின் பாடசாலைப் பெறுபேறுகளுக்கு வழி வகுக்கின்றன. எனவே, கூடுதலான நேரத்தைப் பிள்ளைகளுடன் செலவிடுங்கள். அவர்களுக்கு உற்சாகமூட்டுவதுடன் விதந்துரையுங்கள். பாடசாலையில் நாளாந்தம் நடந்தவை பற்றி அவர்களுடன் கலந்துரையாடி அவர்களைப் புகழ வேண்டிய சந்தர்ப்பங்களிலே தாராளமாகப் புகழுங்கள். அவர்களுக்காக வாசித்து விடுங்கள். அவர்களுடன் சேர்ந்து வாசியுங்கள். வீட்டு அப்பியாசங்களைச் செய்வதற்கு உதவுமுகமாக ஓர் வரையறையின் திட்டம் வகுத்து அதன்படி நடக்க உதவுங்கள். நூல் நிலையத்திற்கு அழைத்துச் செல்லுங்கள். அவர்களுடைய வாசிப்புத் தேவைகளை நிறைவேற்ற முயலுங்கள். அவர்களுடைய ஆசிரியர்களுடன் அடிக்கடி கலந்துரையாடுங்கள். பிள்ளையினுடைய கல்வி மேம்பாட்டிற்கு என்ன விதத்தில் உதவலாமென அறிந்து உதவுங்கள். இது ஓர் கூட்டு முயற்சி என்பதை மறவாதீர்கள்.

வடக்கு யோர்க் கல்விச் சபை பாராட்டுக் குரியது. பெற்றோர்களுக்கு இக் கையேடு பெரும் உதவியாக இருக்கும்.

## அகதி நிலை

(3ம் பக்கத் தொடர்ச்சி)

1993ம் ஆண்டில் அகதிநிலை மறுக்கப்பட்ட ஒருவர் இந்தத் திட்டத்தின் கீழ் இந்தாண்டில் நிரந்தரக் குடியுரிமைக்கு விண்ணப்பிக்க முடியாது. 1993ம் ஆண்டு பெப்ரவரி மாதத்துக்குப் பின்னர் அகதிநிலை மறுக்கப்பட்டவர்களுக்கென தனியான மீளாய்வுத் திட்டம் அண்மையில் அரசாங்கத்தினால் அறிவிக்கப்பட்டது.

1994ம் ஆண்டு ஜுலை மாதம் 7ம் திகதிக்குப் பின்னர் அகதிநிலை மறுக்கப்பட்டவர்களும் இனிமேல் அகதிநிலை மறுக்கப்படுபவர்களும் தங்களது முதலாவது மனு நிராகரிக்கப்பட்ட நாளிலிருந்து மூன்றாண்டு காலத்தைக் கணக்கிட முடியாது. அகதிநிலைக் கோரிக்கை மனு நிராகரிக்கப்பட்டு, பின்னர் அவர்களது அப்பீலும் நிராகரிக்கப்பட்ட நாளிலிருந்தே மூன்றாண்டு காலக் கணிப்பு ஆரம்பமாகும். எனினும், மூன்றாண்டு முடிந்து வரும் அடுத்த 90 நாட்களுக்குள் இவர்கள் தமது விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்க வேண்டும். தவறினால் இவர்கள் விண்ணப்பிக்கும் தகுதியை இழப்பார்கள். எந்தச் சந்தர்ப்பத்திலும் அகதிநிலை கோரிய பின்னர் அதனை வாபஸ் பெற்றவர்களும், விசாரணையின்போது காணாமல்போன அல்லது தலைமறைவான-வர்களும் இந்தத் திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டார்கள். (விபரமான ஆங்கிலக் கட்டுரை பிறிதொரு பக்கத்திலுள்ளது).

# ஸ்ரீ விஜயலெட்சுமி வாசா

534-0011



534-0011

**திருமணம், பதிவுத் திருமணம் மற்றும் அனைத்து இந்துமத கிரியைகள் சேவைக்கும், திருமணத்திற்குத் தேவையான அனைத்து தேவைகளுக்கும் எம்முடன் தொடர்பு கொள்ளவும்**

மண்டபம் - முத்துமணவறை - மண்டப அலங்காரம் - பூமாலை - சடைநாகம் - - தலைப்பாகை - தலைநகை - பூசைப் பொருட்கள் - சைவ உணவு அனைத்து சேவைகளையும் ஒரே இடத்தில் பெற்றுக் கொள்வதற்கு எம்மை நாடுங்கள்.

றொறன்ரோ, ஸ்காபரோ நகரங்களில் கார் நிறுத்தும் வசதியுடன் திருமண மண்டப ஒழுங்குகளை நாங்களே செய்து தருகின்றோம்.

இந்துமத குரு, கனடிய திருமண பதிவு அதிகாரி

## சிவஸ்ரீ பஞ்சாட்சர கிருஷ்ணராஜக் குருக்கள்

( HINDU PRIEST & REGISTAR) புங்குடுதீவு -10, இலங்கை

243 MARGUERETTA ST.,
TORONTO, ONT. M6H 3S4
T.PHONE: 534-0011

1247 ELLESMERE ROAD
SCARBOROUGH, ONT. M1P 2X8
T.PHONE: 750-7319

# பத்தாவது, எட்டாவது, ஆறாவது பிறந்தநாள் வாழ்த்து




**யாழினி - ஜனனி - பாலசத்தியன்**

மாதமாம் ஆவணியில் மலர்ந்து மணம்வீசும்
முத்தான முப்பூக்கள் முறுவலுடன் கூடிநின்று
பத்தாவது எட்டாவது ஆறாவது வயதுகளின்
பாதையினைக் கடக்கையிலே பரமனையே நினைப்திப்பர்

80 Mornelle Court, # 1504
Scarborough, Ontario

## திருக்குறள் போட்டியில் பரிசு பெற்றனர்

வடக்கு யோர்க் கல்விச் சபை விக்டோரியா பார்க் உயர்தர பாடசாலையில் பிரதி சனிக்கிழமைகளில் காலை ஒன்பது மணி தொடக்கம், பன்னிரண்டு மணி வரை தமிழ் விசேட சித்திக்கான வகுப்புகளை நடத்துகிறது. இது சென்ற மூன்று வருடங்களாகத் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. ஏனைய வருடங்களிலும் பார்க்க இவ்வருடம் மாணவர்கள் கூடுதலாக தமிழ் கற்பதற்காக சேர்ந்திருந்தார்கள். மேலும் தமிழ் கற்பதிலும் கூடிய சிரத்தை எடுத்ததையும் காணக் கூடியதாகவிருந்தது. இந்தப் பாடசாலையில் பத்தாம் தரத்தில் தமிழ் கற்பவர்களுக்கிடையில் திருக்குறள் மனனப் போட்டி ஒன்று ஆண்டு இறுதி நிகழ்ச்சியாக நடைபெற்றது. இந்தப் போட்டியிலே முதலாவது இடத்தை செல்விகள் லஷ்மி குகதாசனும், ஜெயந்தி இலங்கேஸ்வரனும் பெற்றனர். இரண்டாவது இடத்தை செல்வி குமுதினி பரமநாதன் பெற்றுள்ளார். மூவரதும் படங்களை இங்கு காணலாம்.







# அறுநூறு கிறிமினல்களைக் கண்டுபிடித்து நாடுகடத்த முப்பதுபேர் கொண்ட விசேஷ அதிரடிப் பிரிவு

## Special task force to track down 600 criminals

அகதிமனு நிராகரிக்கப்பட்டு நாடுகடத்தல் உத்தரவு வழங்கப்பட்ட பின்னரும் தலைமறைவாகவும் ஒழித்தும் இங்கு வசித்து வருவதாகக் கருதப்படுபவர்களை நாடு கடத்தும் திட்டத்தை அரசாங்கம் கடுமையாக்கியுள்ளது.

இதன் முதற்கட்டமாக சுமார் அறுநூறு கிறிமினல்களை நாடு கடத்த ஏற்பாடாகியுள்ளது. இதற்கென குடிவரவுத் திணைக்களத்தில் தனியான ஒரு அதிரடிப் பிரிவை குடிவரவு அமைச்சர் சேர்ஜியோ மார்கி உருவாக்கியுள்ளார்.

முப்பது பேரைக் கொண்ட இப்பிரிவில் பத்து சிரேஷ்ட குடிவரவு அதிகாரிகளும், இருபது விசேஷ பொலிஸாரும் (ஆர். ஸி. எம் பி) சேர்க்கபட்டுள்ளனர். தேவைப்படின் இத்தொகை அதிகரிக்கப்படலாம்.

ஏற்கெனவே 600 பயங்கரக் குற்றவாளிகள் நாடுகடத்தல் உத்தரவை மீறி தலைமறைவாகி வசித்து வருவதாகவும், இவர்களைக் கண்டு பிடித்து வெளியேற்றுவதற்கு இந்தப் பிரிவு சகல நடவடிக்கைகளையும் எடுக்கும் என்றும் அமைச்சர் கூறியுள்ளார். இதற்கென காலக்கெடு எதுவும் வழங்கப்படவில்லை. அனைவரும் நாடுகடத்தப்படும் வரை இந்தப் பிரிவு இயங்கும் என்றும் அமைச்சர் தெரிவித்தார். ஆனால் ரொறன்ரோ ஸ்டார் பத்திரிகை தனது கட்டுரையொன்றில் 15,000 முதல் 60,000 வரையானோர் நாடுகடத்தல் உத்தரவுக்குட்பட்டிருப்பதாகக் குறிப்பிட்டுள்ளது.

இவர்களில் எத்தனை பேர் 'கிறிமினல்கள் என்று எவருக்கும் தெரியாது.

26,000 பேருக்கு நாடு கடத்தல் உத்தரவு வழங்கப்பட்டுள்ளதாக குடிவரவுத் திணைக்களம் சொல்கிறது. கடந்த வருடத்தில் மட்டும் 9,000 பேர் நாட்டை விட்டு வெளியேற்றப்பட்டதாக ஒரு தகவல் தெரிவிக்கின்றது. சிலர் சுயமாகவே வெளியேறியுள்ளனர்.

ரொறன்ரோவில் மட்டும் 40,000 வெளிநாட்டவர் சட்டபூர்வமில்லாது வசிப்பதாக றிபோர்ம் கட்சி எம்பி ஒருவர் நாடாளுமன்றத்தில் கூறியுள்ளார். கடந்த வருடத்தில் உள்நாட்டில் 85,000 பேர் அகதிநிலை கோரி விண்ணப்பித்ததாகவும் இவர்களில் 25,000 பேர் ஏற்கப்பட்டதாகவும் கூறப்படுகின்றது. அப்படியானால் மிகுதிப் பேருக்கு என்னானது? அவர்களில் எத்தனை பேர் குற்றவாளிகள்.

மொத்தம் 1500 கிறிமினல்களைத் தற்போது அடையாளம் கண்டுள்ளதாக அதிகாரி ஒருவர் கூறியுள்ளார். இதுதவிர, 1200 கிறிமினல்கள் கடந்த வருடம் வெளியேற்றப்பட்டதாகவும் தெரிவிக்கின்றனர். அப்படியானால் பிடிபடவேண்டிய, நாடு கடத்தப்பட வேண்டய கிறிமினல்கள் எத்தனை பேர் என்றும் ரொறன்ரோ ஸ்டார் கேள்வி எழுப்பியுள்ளது.

## குருக்கள்மார் மூவருக்கும் கௌரவம்



கடந்த மாதம் கனடாவில் நடைபெற்ற சைவ சித்தாந்த ஆராய்ச்சி மகாநாட்டுக்கு வருகை தந்த பேராளர்களையும் , மகாநாட்டு ஏற்பாட்டாளர்களையும் கௌரவிக்கும் நிகழ்ச்சி ரொறன்ரோவில் ஜுலை மாதம் 17ம் திகதி நடைபெற்றது. இவ் விழாவினைக் குறுகிய காலத்தில் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்த சிவஸ்ரீ பஞ்சாட்சர கிருஷ்ணராஜக் குருக்கள், சிவஸ்ரீ பஞ்சாட்சர விஜயகுமாரக் குருக்கள், சிவஸ்ரீ ஸ்ரீநிவாச சர்வானந்தக் குருக்கள் ஆகியோருக்கு வர்த்தகப் பிரமுகர் திரு. மாணிக்கவாசகர் அவர்கள் பொன்னாடை போர்த்தி, சந்தன மாலை சூட்டியஞான்று நால்வரும் சேர்ந்து எடுத்துக்கொண்ட படம். (படப்பிடிப்பு: எஸ். ரி. சிங்கம்)

## தமிழ் இசைக் கலாமன்ற இயல், இசை, நடனம்

தமிழ் இசைக் கலாமன்றம் வழங்கும் "அச்சமில்லை, அச்சமில்லை, அச்சமென்பதில்லையே" இயல்-இசை-நடன நிகழ்ச்சி 1994ம் ஆண்டு செப்டம்பர் 11ம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5:30 மணி முதல், நோர்த் யோர்க்கில் 35 Fairview Mall Driveல் அமைந்துள்ள Fairview Library Theatreல் (டொன்மில்ஸ்/ஷெப்பர்ட் சந்திப்புக்கருகில்) நடைபெறவுள்ளது. மகாகவி பாரதியை நினைந்து கனடாவாழ் தமிழ் மக்கள் சார்பில் நடத்தப்படும் இந்த விழாவில் கலந்து கொள்ளப் பிரவேசக் கட்டணம் எதுவுமில்லை.

## மிஸிஸாகாவில் சாயி பஜனை

ஸ்ரீ சத்திய சாயி பகவான் சமித்தியினரால் ஒவ்வொரு வாரமும் வியாழக்கிழமை இரவு எட்டு மணி முதல் ஒன்பதரை மணி வரை பஜனையும், தியான வழிபாடும் மிஸிஸாகாவில் 1447 அலக்ஸான்ட்ரா அவினியுவில் அமைந்துள்ள ஸ்ரீசத்ய சாயி பாபா நிலையத்தில் நடைபெறுகின்றது.

# கனடாவில் உங்கள் நிதி செழிக்க...

நாடுங்கள்



## யோகி தம்பிராஜா F.C.M.A.

நிதி நிபுணர், ஆலோசகர்

- வளர்ச்சி நிதிகள் (Mutual Funds)
- வரி தவிர்க்கும் திட்டங்கள் (RRSP)
- குழந்தைக் கல்வி / சேமிப்புத் திட்டங்கள்
- இளையோர் நிரந்தர ஆயுள் காப்புறுதித் திட்டங்கள்
- முதியோர் மன ஆறுதல் திட்டங்கள்

இலவச ஆலோசனைகளுக்கு
இன்றே தொடர்புகொள்ளுங்கள்

FORTUNE FINANCIAL

**(416) 412-4267**

24 Hours / 7 Days a Week

ஓம்

# ஸ்ரீ கௌரி மங்கள சேவை

அனைத்து இந்து மத கிரியைகளுக்கும் கனடிய திருமணப் பதிவு அதிகாரி, இந்து மதகுரு

**பஞ்சாட்சர விஜயகுமாரக் குருக்கள்** (ஜயாமணி) (புங்குடுதீவு -10)

திருமணம், திருமணப் பதிவு
புதுமனை புகுதல்
கடை திறப்பு வைபவம்
புண்யாக வாசனம்
பூப்புனித நீராட்டு விழா
பூமாலை, ஆண்டாள் மாலை
மற்றும்



சடைநாகம், தலை நகை செற்
முத்து மணவறை
தலைப்பாகை
பந்தல் அலங்காரம்
கல்யாண பூஜைப் பொருட்கள்
ஆலய வைபவங்களுக்கான
முத்துச் சப்பரம்

**ஆகியவைகளுக்கு என்றும் எப்பொழுதும் எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்**

**Tel: (416) 266-3333**

628 E, Birchmount Road, Scarborough, Ontario. M1K 1P9

ஒன்ராறியோ வர்த்தக
சம்மேளனத்தின் சிறந்த
சேவைக்கான
விருது பெற்ற
நிறுவனம்

ஏசியன் கிறிக்கெட் கிளப்பினரின்
சிறந்த வர்த்தக
நிறுவனத்துக்கான
விருது பெற்ற
நிறுவனம்

# ஸ்ரீ சிவா ஜுவலறி

## SRISIVA JEWELLERY

721 Bloor St. W., Toronto, Ontario. M6G 1L5

**(416) 531-4867**